ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

டிசம்பர் 2009 - ஜனவரி 2010



# தொண்டன்

டிசம்பர் 2009 - ஜனவரி 2010

மலர்: 41 இதழ்: 11



**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**ஓவியங்கள்**
சுதா



**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்



**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 01 |
| கிறிஸ்து பிறப்பு பெருவிழா | : | 02 |
| பெத்லகேம் | : | 05 |
| உலக அதிசயங்கள்... | : | 06 |
| கிறிஸ்து பிறப்பு விடுக்கும்... | : | 08 |
| கடுகுக்கதை | : | 10 |
| இயேசுவின் பிறந்தநாள் | : | 11 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | : | 12 |
| வரவிருக்குத் தெய்வத்தின்... | : | 14 |
| துயரந் தணிக்க வருக | : | 16 |
| மூன்று கிறித்தவ தமிழ்... | : | 17 |
| உங்கள் சுகமான... | : | 19 |
| ஈழத்தை அளந்த புனிதன் | : | 20 |
| மாணவர் பக்கம் | : | 22 |
| இலக்கிய மஞ்சரி | : | 23 |
| விவிலியம் கற்போம் | : | 27 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

மெசியாவை எதிர்பார்த்துக் காத்திருந்த முதியவர் சிமியோன் குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தியவுடன் ஆண்டவரின் மீட்பைத் தன் கண்களால் கண்டதாகவும் இனி தான் நிம்மதியோடு தன் வழ்க்கைப் பயணத்தை முடிப்பேன் என்றும் மகிழ்ச்சியோடு அறிக்கை விடுக்கின்றார்.

பலருடைய ஏக்கங்களின், கனவுகளின், பெருமூச்சுகளின் உள்ளக் குமுறல்களின் அடிப்படையாக இருக்கும் விடுதலை வேட்கையைக் கடவுள் ஒருநாள் தனது ஆற்றலால் செய்து முடிக்கிறார். அவ்வாறே தமிழ் பேசும் மக்களாகிய எமது கனவையும், தியாகத்தையும் கடவுள் தம் ஆற்றலால் செய்து முடிப்பார் என நம்பி எதிர்பார்த்து செபிப்பதுதான் இன்று நாம் செய்யவேண்டியது.

அன்று மார்ட்டின் லூதர் கிங் "ஒருநாள் வரும் என் நான்கு பிள்ளைகளும் தோலின் நிறத்தை வைத்து அல்ல, அவர்களின் நன்னடத்தையை வைத்து மதிக்கப்படுவர். என் மக்கள் உரிமை வாழ்வு பெறுவர். கறுப்பினத்தவர் ஒருவர் வெள்ளை மாளிகைக்குச் சென்றும் ஆட்சி புரியும் காலம் வரும். என் கனவு இது. அது நிறைவேறும் காலம் வரும்" என்று தெரிவித்திருந்தார். இன்று அது நிறைவேறியிருக்கிறது.

ஆம்! தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, இன அழிப்புச் செய்யப்பட்ட மக்களுக்கான மீட்பு என்னும் அருள்ஒளி ஒருநாள் வந்தே சேரும். அறியாமை, அகங்காரம், ஆணவம், அடக்குமுறை, அடிமைத்தனம் என்ற இருள் அகல, ஒளியை ஏற்ற மனிதநேய ஆர்வலர்கள் போராடிக்கொண்டேதான் இருக்கிறார்கள். கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுகின்ற நாம் ஒவ்வொருவரும் இத்தகைய நல்லதோர் கூட்டத்தில் இயேசுவின் வழியில் நம்மையும் இணைத்துச் செயற்படுவது அவசியம். ஏனெனில் இருளைப் பழிப்பதை விடுத்து ஒளியேற்ற முனைவதுதான் தலைசிறந்தது.

இவ்வாறு நோக்கும்போது ஆண்டுக்கொரு முறை வந்துபோவதுதானே கிறிஸ்து பிறப்புப் பெருவிழா என்று கூறி அலங்காரங்களிலும், ஆடம்பரங்களிலும், கருத்தையும், பொருளையும் செலுத்தி நம் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வதில் இல்லை நம் பெருமை என்பதைப் புரிந்துகொள்வோம்.

அறியாமை இருளிலும், இல்லாமைக் கொடுமையிலும் வறுமைப் பிடியிலும் வாடித் தவிப்போரின் வாட்டத்தைப் போக்க விண்ணிலிருந்து நம்மைத் தேடி வரும் விடியலின் கீற்றாக இக்கிறிஸ்து பிறப்பு பெருவிழா நிகழ்வுகள் இருக்கட்டும். பாவமன்னிப்பால் வரும் மீட்பைப் பாரில் உள்ள மாந்தர் அனைவரும் அடைந்திட பாலகன் பிறக்கட்டும். எனவே, நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

அமைதியின் விழாவாக,
மனமாற்றத்தின் விழாவாக,
பகிர்தலின் விழாவாக,
மன்னிப்பின் விழாவாக
தியாகத்தின் விழாவாக அமையட்டும்.

இவ்வாறு மக்களினத்தார் அனைவருக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக கிறிஸ்து பிறப்புப் பெருவிழா அமையட்டும். இப்படியாக அர்த்த மளிக்கும் விழா பிறக்க இருக்கும் புது வருடத்தையும் "விடிவைத் தரும்" ஆண்டாக மாற்றும் என்பதில் பற்றுறுதி கொள்வோம்.

Merry X'mas & Happy Newyear...!

– ஆசிரியர்



## இறைவாக்கு

"இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது"

(லூக்கா: 1:78-79)

# கிறிஸ்து பிறப்பு பெருவிழா



**பேருள்தந்தை. பொன்னையா ஜோசப் ஆண்டகை அவர்கள்**

கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடும் இக்காலத்தில் இலட்சக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இல்லிடமின்றி இத்தனை வருடமும் கட்டிக் காத்துவந்த சொத்துகள் அனைத்தையும் இழந்து, யுத்தத்தினாலும் வன்செயல்களினாலம் இடம்பெயர்ந்து அகதிகளாக ஒடுங்கிக் கிடக்கின்றனர். சமாதானத்துக்கான யுத்தத்தில் பொழியப்பட்ட குண்டுச் சத்தம் ஓய்ந்துவிட்டாலும் இதனால் பலவகையிலும் பாதிக்கப்பட்ட மக்களின் உள்ளக்குமுறல் ஓயவில்லை. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற நிலை நீடிக்கின்ற நிலையில் மற்றுமொரு கிறிஸ்மஸ் வந்துவிட்டது. கிறிஸ்துவின் பிறப்பு ஒளியின் விழாவாகக் கொண்டாடப்பட்டாலும், இன்னும் இருளின் ஆட்சி தொடருவதாகத் தெரிகின்றது. இந்நிலையில் கிறிஸ்துபிறப்பின் அர்த்தம் என்ன? அதனைக் கொண்டாடுவதன் பலன் என்ன? என்பதைச் சிந்திப்போம்.

எம் நாட்டைப் பொறுத்தளவில் இன்று பேரினவாதம் என்ற மரம் மொழியின் பெயரால் நீர் ஊற்றப்பட்டு, மதத்தின் பெயரால் உரமிடப்பட்டு, வன்முறையினால் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது. பேரினவாதம் என்ற மாயை பலரது கண்களையும் குருடாக்கிவிட்டது. அதிகாரத்தில் உள்ளவர்கள் தங்கள் இருக்கைகளைத் தக்கவைத்துக்கொள்ள பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டி அனைவரையும் ஏமாற்றிக்கொண்டிருக்கின்றனர். எட்டப்பர் சிலர் தங்கள் வருவாய்க்காக மற்றவரைக் காட்டிக்கொடுப்பது, கடத்துவது கொலை செய்வது போன்ற செயல்களில் மிருகத்தனமாக நடந்துகொள்கிறார்கள். அவர்களை நினைத்தால் உள்ளம் பதைக்கிறது. இந்நிலையில் கிறிஸ்துவின் பிறப்பினைக் கொண்டாடுவதில் அர்த்தமுள்ளதா?

ஆம்! அர்த்தம் உண்டு. அதனைக் கொண்டாடவேண்டும். இருளின் ஆதிக்கம் தொடர்வதாக இருந்தாலும் பிறந்திருக்கும் ஒளி இருளை வென்றுவிடும் என்ற நம்பிக்கையின் ஒளி ஒளிர்கிறது. கிறிஸ்து பிறந்தபோதும் கொடுங்கோன்மை நிலவியது, இன்றும் தொடருகின்றது. அன்றும் மனித உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. இன்றும் அந்நிலை தொடருகின்றது. நீதி நிலைநாட்டப் படாததால் அநீதி, அக்கிரமம், ஊழல் மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம்வரை தலைவிரித்தாடுகின்றன. நீதி இல்லையேல் அமைதி எப்படிப் பிறக்கமுடியும்? பிறந்திருக்கும் குழந்தை அமைதியின் அரசர். அன்றும் அக்குழந்தையைக் கொல்லத் தேடினான் மன்னன் ஏரோது. இன்றும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டும் அநாதைகளாக மனநிலை குன்றியவர்களாக ஆக்கப்பட்டுமுள்ளனர்.

### மனிதன் மாண்படைய வேண்டும்

அவர் உருவாக்க வந்தது இறைநம்பிக்கை கொண்ட புதியதொரு சமூகத்தை, அச்சமூகத்தில் யாரும் அந்நியரும்

வெளியாருமல்ல. அதில் எவ்வித வேறுபாடும் தலைதூக்காது. பாகுபாடுகளற்ற சமூகமாக விளங்கும். ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் உலகுக்கு வந்த சீரழிவைச் சீரமைக்க இறைமகன் தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே தம் பணி என உணர்ந்து கீழ்ப்படிதலால் மனித அவதாரம் எடுத்து ஒப்புரவு, அமைதி ஏற்பட வழிவகுத்தார். இதனைப் பவுல் அடிகளார் "கிறிஸ்து வந்து மனிதனை மனிதனிடமிருந்து பிரித்த தடைச் சுவர்களை அழித்து அமைதியின் நற்செய்தியை அறிவித்து பிரிந்தவர்களிடையே ஒப்புரவை ஏற்படுத்தினார்" (எபே 2:17-20) என்கிறார்.

மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, அவனது உடமைகள் சூறையாடப்பட்டு, அவன் பிறந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்டு, பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் போன்றவை பறிக்கப்பட்டு மனித மாண்பினை இழந்து நிற்பவன் முழு மனிதனல்ல. அவன் அரைகுறை மனிதன். அவன் எப்படி முழு மனிதனாக வாழ முடியும்? என வாழ்ந்துகாட்டி அவன் முழுமையடைந்த மனிதனாக வாழவேண்டும் என வலியுறுத்த வந்தவர்தான் மனுவுரு எடுத்த மாபரன் கிறஸ்து. 'இறைவனது மகிமை மனிதன் மாண்படைவதே, மகிமையடைவதே' என இரனேயுஸ் கூறுகிறார். இறைவன் மனிதனானது எமது மனிதத்தன்மையிலிருந்து எம்மைத் தூக்கிவிடவல்ல, மாறாக எவ்வாறு முழு மனிதனாக வாழமுடியும் என்பதைக் கற்றுக்கொடுப்பதற்காகத்தான்.

மனிதன் மதிக்கப்படவேண்டும். மனிதன் மாண்புறவேண்டும். அப்போதுதான் பிரபல்யம் வாய்ந்த கிறிஸ்மஸ் கரோல் கீதத்தில் பாடப்படும் வரிகளான 'மனிதன் என்றென்றும் வாழவேண்டும்' (Man will live for ever more because of X'mas Day) அர்த்தம் பெறும்; நிஜமாகும். கிறிஸ்து பிறப்பு இன்பக் கனவுகளின் திருவிழா அல்ல. மாறாக, மனிதத்தின் பெருவிழா.

கிறிஸ்துவின் ஒளி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தோன்றி மறைந்துவிட்ட ஓர் ஒளியல்ல. மாறாக இவ்வொளி காற்றில் அணையாத திருவிளக்காய், குன்றின்மீது இட்ட கலங்கரைத் தீபமாய் மாந்தர் அனைவர் வாழ்விலும் எக்காலத்துக்கும் சுடர் விட்டு ஒளிர்கின்றது. காற்றில் அலைதுரும்பாய்க்

# யேசு என்னும் பேரொளி

ஒளி ஒன்று தோன்றும்
ஓடுமிருட் கூட்டம்
விழியெல்லாம் மலரும்
வியப்பு தனில் மூழ்கும்
வழி ஒன்று காட்டும்
வையமிது வாழ
பழி எல்லாம் நீங்கும்
பழைய கதை மாறும்

இந்த ஒளி போல
இன்னுமோர் ஒளி
எந்த விழி காணும்?
இகமெல்லாம் கேட்கும்!
அந்தரத்தை விட்டு
அன்பு வடிவாக
வந்த ஒளி தன்னை
வணங்கியடி பணிவர்

யேசு எனும் நாமம்
ஏற்கும் அது பின்பு
வீசுமதன் கதிர்கள்
வியனுல கெங்கும்
நீசரதை வெறுப்பர்
நிந்தை மிகச் செய்வர்
ஈசன் ஒளி கண்டு
இனிய நகை பூக்கும்

பேரொளியின் பின்னால்
பிரளயத்தைப் போல
ஊரெல்லாம் திரளும்
உண்மைதனை அறிந்து
காரெல்லாம் சேர்ந்து
கதிரவனை எதிர்க்கும்
ஓர்கணப் போதுள்
ஓடியவை மறையும்

ஒளிதன்னை வெல்லல்
ஒல்லுமோ இருளால்?
அழிவொன்றே நேரும்
ஆரதைத் தடுப்பார்?
விழியில்லா மனிதா!
விளங்கி நீ கொள்க!
ஒளி என்னும் யேசு
உலகதன் சக்தி

● வாகரைவாணன்

காலமெல்லாம் அலைக்கழிக்கப்படும் நம் ஒவ்வொருவர் வாழ்விலும் ஒரு புதிய நம்பிக்கையை, பொலிவை, உயிரோட்டத்தைக் கொண்டு வருகின்றது. துன்பங்கள், அநீதிகள் நிறைந்த இந்த உலக வாழ்க்கையில் சோகங்கள் கடலாகி நம்மைத் தீவாக்கும்போது இருளின் பிடியில் இருப்பது போன்றதோர் உணர்வு ஏற்படுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளிலெல் லாம் இந்த ஒளியாம் கிறிஸ்து நம்பிக்கை என்னும் பேரொளியை நம்மேல் ஒளிரச் செய்கிறார். நல்லவேளை கிறிஸ்துவின் பிறப்பினால் இவ்வுலகில் ஏற்றிவைக்கப்பட்ட ஒளி இன்றும் அணையாமல் எரிந்துகொண்டிருக்கிறது. அவரது ஒளி பெத்லகேமில் ஏற்றிவைக்கப்பட்டு பின்னர் அணைக்கப்படவில்லை. அழிவுகளின் மத்தியிலும் அனர்த்தங்களின் நடுவிலும் எரிந்துகொண்டுதானி ருக்கிறது. அதனை யாரும் அணைக்க முடியாது; எந்த இருளும் அதனை ஆட்கொள்ள முடியாது.

இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவதே மேல் என்பதற்கிணங்க எம்மைச் சுற்றி எவ்வளவுதான் இருள் சூழ்ந்திருந்தாலும் எமக்கு விடுதலை அளிக்கப் பிறந்த இம்மானுவேல் எம்மோடு என்றென்றும் இருக்கின்றார் என்ற நம்பிக்கை ஒளியை எல்லா உள்ளங்களிலும் ஏற்றிவைப்போம். அவர் எம்மோடு இருக்கும்போது நாம் எதற்கு அஞ்சவேண்டும்? சுதந்திரத்துக்கான, ஒப்புரவுக்கான, அமைதிக்கான, நீதிக்கான எமது தேடல்கள், போராட்டங்கள் பெறு மதியற்றவையாகத் தோன்றினாலும் நாம் கொண் டாடும் கிறிஸ்து பிறப்பு விழா இயேசுக் கிறிஸ்து வழியாக மனுக்குலத்தின் விடுதலைக்கான இறை வனின் தலையீட்டை உணர்த்தி நிற்கின்றது. எனவே நம்பிக்கை தளராமல் ஒப்புரவு முயற்சிகளை முன் னெடுப்போம்.

இயேசுவின் பிறப்பு எதற்காக இடையர்களுக்கு மட்டும் அறிவிக்கப்பட்டது? ஏனெனில் அவர்கள்தான் நல்மனம் படைத்தவர்களாக விளங்கினார்கள். நல்மனம் என்பது எவ்வேளையிலும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றும் தாராள உள்ளம். அனைவரையும் அன்பு செய்யத் துடிக்கும் இதயம். அத்தகையவர்களுக்குத்தான் இயேசுபாலனை முதன்முதல் தரிசிக்கும் பேறு கிடைத்தது. அவர் களின் நல்மனத்துக்கு பரிசு கிடைத்தது. அந்த அமைதி பெற்று நல்மனதுடன் வாழ வாருங்கள் ஆசி கூறுவோம்.




மாட்டுத் தொழுவமதில்
மரியாளின் மணிவயிற்றில்
பாடுகள் படப்பிறந்த
பாலகனாம் இயேசுதனை
நாம் நினைத்துப் பார்ப்பதெல்லாம்
நத்தார் தினத்தில்தான்
ஏனென்றால் மற்றநாளில்
எவருக்கும் நேரமில்லை

நேரம் கிடைத்தாலும்
நினைப்பதற்கு முடியாத
வாழ்க்கைப் பிரச்சினைகள்
வரவுக்கும் மேலாக
நாம் வாழும் பூமியிலே
நாளெல்லாம் பொருட்களுக்கு
ஆனைவிலை குதிரைவிலை
ஆண்டவரை யார் நினைப்பார்?

செ. குணரத்தினம்

# பெத்லகேம் (Bethlehem)

இயேசுவின் புனித பூமி "பெத்லகேம்". இயேசுக் கிறிஸ்து பிறந்த நாள் கிறிஸ்துமஸ் என்று உலகம் எங்கும் கொண்டாடப்படுகிறது. இறைவன், இயேசு என்னும் பெயரில், மனித உருவில் பிறந்த ஊர் பெத்லகேம்.

உலகிலுள்ள அனைத்துக் கிறிஸ்தவ மக்களாலும் புனிதமான இடமாகக் கருதப்படும் பெத்லகேம், இஸ்ராயேல் நாட்டில் எருசலேம் நகருக்குத் தெற்கில் 10km தூரத்தில் உள்ளது.

பெத்லகேம் கிறிஸ்தவர்களுக்கு இயேசு பிறந்த இடம். முஸ்லிம்களுக்கு முகம்மது நபி எருசலேம் போகும் வழியில் நின்று பிரார்த்தனை செய்த இடம். யூதர்களுக்கு யூத குலத்தின் தலைவி ராக்கேல் புதைக்கப்பட்ட இடம் என்பதுடன் யூத அரசன் தாவீது பிறந்து, அரசனாக அபிஷேகம் செய்யப்பட்ட இடம் என மூன்று பிரிவு மக்களுக்கும் மிக முக்கியமான புனித இடமாகக் கருதப்படுகிறது.

பெத்லகேம் என்ற பெயருக்கு எபிரேய மொழியில் "ரொட்டியின் இல்லம்" என்றும், அரேபிய மொழியில் "லாம் தேவதையின் இல்லம்" என்றும், "இறைச்சியின் இல்லம்" என்றும் பொருள். பெத்லகேமுக்கு "எப்ராத்தா" என்ற மற்றொரு பெயரும் உண்டு. அதற்கு "கனி தருவது" என்று பொருள். பெத்லகேமில் 50 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இதில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் சரிசமமான எண்ணிக்கையில் உள்ளனர்.

நசரேத் ஊரிலிருந்து பெத்லகேம் 130km, தெற்கில் 2350 அடி உயர மலைச் சரிவில் அமைந்துள்ளது. பெத்லகேமில், "பிறப்புக் கோயில்" என்ற ஆலயம் கி.பி.333ம் ஆண்டு கொன்ஸ்டான்டைன் பேரரசனால் கட்டப்பட்டது. இக்கோயில் நுழைவாயில் 4 1/2 அடி உயரமே கொண்டது. கோயிலில் பெரிய பீடத்திலிருந்து இரு புறங்களிலும் 15 படிக்கட்டுகள் கீழே பூமிக்குள் செல்கிறது. அதில் இறங்கிச் சென்றால் இயேசு பிறந்த இடம் உள்ளது. அது "பிறப்புக் குகை" என்று அழைக்கப்படுகின்றது. 12.3M நீளமும், 3.15M அகலமும் கொண்ட இக்குகையின் அடித்தளம் வெள்ளைப் பளிங்குக் கற்களால் ஆனது. அதன்மேல் 14 முனை கொண்ட பொன்னிற நட்சத்திரத் தகடு பதிக்கப்பட்டுள்ளது. அதற்குமேல் 15 எரியும் விளக்குகள் தொங்குவதைக் காணலாம்.




தரையில் இலத்தீன் மொழியில் "இங்கு கன்னி மரியிடமிருந்து இயேசுக் கிறிஸ்து பிறந்தார்" என்ற வாசகம் உள்ளது. அருகில் மாதா பீடம் ஒன்று உள்ளது.

முதலாவது, புனித சூசையப்பர் சிற்றாலயம், வானதூதர் சூசைக்குக் கனவில் தோன்றி, குழந்தையையும் தாயையும் அழைத்துக்கொண்டு எகிப்துக்கு தப்பிச் செல்லுமாறு கூறிய இடம்.

இரண்டாவது, மாசில்லாக் குழந்தைகள் சிற்றாலயம், ஏரோது அரசனால் பெத்லகேமில் கொலை செய்யப்பட்ட 20 ஆண் குழந்தைகள் புதைக்கப்பட்டுள்ள இடம்.

முன்றாவது, புனித ஜெரோம் சிற்றாலயம், கி.பி. 380-420 வரை புனித ஜெரோம் இக்குகையில் தங்கி பைபில் புத்தகத்தை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். இதைத் தவிர பெத்லகேமிலிருந்து 2km தூரத்தில் சமவெளிப்பகுதியில் பெரிய குகைப் பாதை ஒன்று உள்ளது. இயேசு பிறந்தபோது தூங்கிக்கொண்டிருந்த இடையர்கள் முன் வானதூதர் தோன்றி இயேசு பிறந்த நற்செய்தியை அறிவித்தது இந்த இடத்தில்தான். இது இன்று "இடையர் குகை / இடையர் காடு" என்று அழைக்கப்படுகிறது.

- J. ஜெனி -

# உலக அதிசயங்கள்

## ஒரு வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டம்

கடந்த இதழ் தொடர்ச்சி...



மூன்றாவதாக கிரேக்க நாட்டின் ஒலிம்பியாவிலுள்ள Zeus (Jupiter) தெய்வத்தின் சிலை அற்புதமானது. பேடியாஸ் (Pheidias) என்ற சிற்பி இதை நிர்மாணித்தார். இச்சிலை 40 அடி உயரமானது. இச்சிலை கதிரையில் அமர்ந்த Zeus தெய்வத்தைப் பிரதிபலிக்கின்றது. அச்சிலையின் தலை அவ்வாலயத்தின் கூரைவரை முட்டி நிற்கிறது. இச்சிலையின் உடைகள் தங்கத்தாலானவை. கண்கள் விலையுயர்ந்த கற்களாலானவை.

நான்காவதாக Ephesus நகரத்தில் அமைந்திருந்த டயானா (Diana) தெய்வத்தின் கோவில் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. இது ஏசியா மைனர் (ASIA MINOR) என்ற நாட்டில் அமைந்துள்ளது. இதுதான் தற்காலத் துருக்கி. கி.மு. 350 ஆண்டுகளுக்கு முன்பு இது கட்டப்பட்டிருக்க வேண்டும். இது புனித பவுல் (St. Paul) காலத்திலேயும் கிறிஸ்து சகாப்தத்திலேயும் முழுப் பெருமையோடு விளங்கியது. அக்கோவிலின் கூரைகள் 60 அடி உயரமான நன்கு கலை மெருகூட்டப்பட்ட தூண்களிலே நிற்கின்றன. அதன் சுவர்கள் கிரேக்கக் கலைஞர்களால் அழகுற வடிவமைக்கப்பட்ட கற்களினால் ஆனது. கி.பி. 262ம் ஆண்டு இது Goths என்பவர்களால் அழிக்கப்பட்டது. இதன் கற்றூண்கள் சில பிரித்தானியா மியூசியத்தில் (Museum) உள்ளன.

ஐந்தாவதாக சின்ன ஆசியா (ASIA MINOR) அல்லது தற்காலத் துருக்கியை ஆண்ட மௌசோலஸ் (Mousolus) என்ற மன்னனது கல்லறையாகும். அவனது பட்டத்து அரசி Artemisia தன்னுடைய அளவற்ற நிதியத்தைக் கொண்டு மன்னனுக்கு Halicarnassus என்ற இடத்தில் கல்லறை அமைத்து அக்கால மிகச் சிறந்த கலைஞர்களால் அக்கல்லறையை அழகுபடுத்தினாள். கி.பி 15ம் நூற்றாண்டளவில் பூமி அதிர்ச்சிக்கு இக்கல்லறை உள்ளானது. இன்று மௌசோலாஸ் என்பது திரிந்து மௌசோலியம் என்று மிகப் பெரிய கல்லறைக்கு கூறப்படுகின்ற ஒரு சொற்பிரயோகமாகப் பயன்படுகின்றது.

ஆறாவது அதிசயமாக Rhodes அமைந்திருந்தது. இது மிகப் பிரமாண்டமான சூரிய தெய்வத்தைக் குறிக்கின்றது. இது Helios தெய்வத்தின் வெண்கலச் சிலையேயாகும். 'றோட்' என்ற தீவின் துறைமுகத்தில் இது அமைந்திருந்தது. சுமார் 105 அடி உயரமானது. இது அக்காலத்தில் ஒரு வெளிச்சவீடாகவும் மாலுமிகளுக்குப் பயன்பட்டது. இதுவும் பூமி அதிர்ச்சிக்குப் பலியானது. நாம் பயன்படுத்துகின்ற ஆங்கிலச் சொல்லாகிய "Colossal" மேற்கூறிய 'மிகப்பெரிய' என்ற பதத்திலிருந்து பாவனைக்கு வந்ததாகும்.

ஏழாவதாகக் கருதப்பட்ட உலக அதிசயம் Alexandria பட்டணத்தில் அமைந்திருந்த எகிப்திய Phares 'பாரேஸ்' (கி.மு 280) என்ற வெளிச்சவீடாகும். ஏறக்குறைய 600 அடி உயரமான அதன் உச்சியிலே ஒரு விளக்கு எப்பொழுதும்






எரிந்துகொண்டிருக்கும். இதுவும் கி.பி. 1375ம் ஆண்டு பூமி அதிர்ச்சிக்குள்ளாகியது.

எனவே, உலக மாந்தர்கள் கலையைத் தம் வாழ்க்கையில் எவ்வளவு போற்றினர், அதற்காக எவ்வளவு உழைத்தனர் என்பது நாம் மனதில் கொள்ளவேண்டிய முக்கிய அம்சங்களாகும். கலையின்றி வாழ்வில்லை; வாழ்வே ஒரு கலை.

**சகோ.**
**எஸ்.ஏ.ஐ.**
**மத்தியு FC**



# நத்தார் நினைவுகள் 02



அன்றுமுதல் இன்றுவரை
அடிப்படையில் மனிதரெல்லாம்
ஒன்றுதான் இவர்கள் வாழ்வில்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
நன்றிகெட்ட தன்மைகளும்
நயவஞ்சகக் குணமும்
தன்தனக்குத் தனக்கென்ற
தந்திரமும் கொண்டவர்தான்

இவரையெல்லாம் திருத்துதற்கு
இயேசுபாலன் ஒருவரல்ல
பலநூறு பிறப்பெடுத்துப்
பாரினிலே வந்தாலும்
அவர்களையும் சிலுவையேற்றி
அழிமதியே செய்வார்கள்
தவறுகளை உணராதோரை
திருத்துவது மிகக்கடினம்

செ. குணரத்தினம்

## முன்னுரை

மனிதவாழ்வானது பல்வேறு விதமான உலக கவலைகளினாலும், குடும்பச் சுமைகளினாலும் ஆக்கிரமிக்கப்பட்டு மீளமுடியாத துயரத்தில் தவிக்கின்றது. இத்தகைய துயரத்திலும் வேதனையிலும் மனித வாழ்விற்கு ஓரளவாவது மகிழ்வினைக் கொடுப்பது அவர்கள் தமது அன்றாட வாழ்வில் கொண்டாடுகின்ற கொண்டாட்டங்களாகும். கொண்டாட்டங்கள் பல்வகைப்படும். அவை குடும்பக் கொண்டாட்டங்களாக இருக்கலாம் (பிறந்தநாள், திருமணம்), சமூகக் கொண்டாட்டங்களாக இருக்கலாம் (தேசிய தினம், கலாசார தினம்), சமயக் கொண்டாட்டங்களாக இருக்கலாம் (தீபாவளி, றம்சான்). இவ்விழாக்கள் மனித வாழ்விற்கு மகிழ்வினைக் கொண்டுவருகின்றன. எனவே, விழாக்களின் நோக்கமே மனிதர்கள் கூடிவருவதும், ஒன்றாக மகிழ்ந்திருப்பதுமே ஆகும். அந்தவகையில் சமயவிழாக்கள் மதங்களை ஒன்றுபடுத்துவதாகவும், மத நல்லிணக்கத்தை வலியுறுத்துவதாகவும் அமையவேண்டும். அவ்வாறு அமையும்போது மட்டும்தான் அவ்விழாக்களின் நோக்கம் நிறைவடைகிறது.

## கிறிஸ்தவர்களும் கிறிஸ்மஸ் பண்டிகையும்

உலகமெங்கும் பரந்து வாழுகின்ற கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்ற விழாக்களுள் மிகவும் பிரசித்தி பெற்ற விழாவாக கிறிஸ்மஸ் பண்டிகை திகழ்கின்றது. ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 25ம் நாள் கிறிஸ்மஸ் பண்டிகையாகக் கொண்டாடப்படுகின்றது. அவ்வாறு கொண்டாடப்பட்டாலும் அதற்குச் சில மாதங்களுக்கு முன்னதாகவே விசேடமாக மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் இவ்விழா களைகட்டத் தொடங்கிவிடுகிறது. ஐரோப்பிய நாடுகளில் குளிர்கால வருகையுடன் கிறிஸ்மஸ் விழாவும் தொடங்கிவிடும் என்று சொன்னால் மிகையாகாது. இத்தகைய சூழ்நிலை இன்றைய உலகமயமாக்கல், நுகர்வுக் கலாசாரம் போன்ற பண்புகளால் ஆசிய நாடுகளிலும் பரவத் தொடங்கியுள்ளது என்று நம்மால் அவதானிக்க முடிகின்றது. டிசம்பர் மாதம் தொடங்கிவிட்டாலே எமது நகர், கிராமப்புற கடைகளில் எல்லாம் நத்தார் தாத்தா பொம்மைகளும் கிறிஸ்மஸ் அலங்காரப் பொருட்களும் கொலு வீற்றிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனூடாக இன்று இந்த விழா ஒரு வியாபார வர்த்தகப் பண்டிகையாக (Commercial Festival) மாறியுள்ளதைக் காணமுடிகின்றது.

## திருவிவிலியமும் கிறிஸ்துபிறப்பு விழாவும்

தொடர்ச்சியான அடிமைத்தனங்களின் கீழ் (பபிலோனிய, கிரேக்க, உரோமை) வாழ்ந்துவந்த இஸ்ராயேல் மக்கள் தங்களுக்கு இவ்வடிமைத்தனங்களிலிருந்து விடுதலை வேண்டும் என்கிற எதிர்பார்ப்புடன் வாழ்ந்துவந்தார்கள். அவர்களது எதிர்பார்ப்புகள் எல்லாம் அடிமைத்தன அரசுகளிடமிருந்து தங்களை விடுவித்து தங்களை ஆளவென ஒரு மன்னனை அதுவும்





"நடிகர்கள் நடிகைகளுடன் இவ்வளவு நெருங்கி நடிக்கிறார்களே! கூச்சமாக இருக்காதா?"

"நாம் அலுவலகத்தில் கோவைகளைக் கண்டபடி கையாளுகிறோமே! எப்போதாவது கூச்சப்பட்டதுண்டா"

● மணி

இவ்வுலகின் மன்னனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாலும் இம்மன்னனையே தங்கள் வாழ்வின் மெசியாவாகவும் (மீட்பர்) எதிர்பார்த்திருந்தார்கள். இந்த மெசியாவைக் குறித்து இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் முன்மொழிவு செய்திருந்தார்கள் என்பதனை நாம் விவிலியத்தின் வாயிலாக அறிந்துகொள்ளலாம் (எசா 7:14, எசேக் 34:23, மீகா 5:2). அத்தகைய எதிர்பார்ப்பின் நிறைவாகத்தான் இறைவன் தாம் வாக்களித்த மீட்பரை இம்மண்ணுலகத்தில் தோன்றச் செய்து தமது இறைதிட்டத்தை வெளிப்படுத்தினார். ஆயினும் இவ்வுலக அரசனை எதிர்பார்த்திருந்த இஸ்ரயேல் மக்கள் மாட்டுத்தொழுவத்தில் மனித அவதாரம் எடுத்த இறைமகனை மீட்பராக அல்லது மெசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும்கூட இயேசுக் கிறிஸ்துவை இறைமகன் என விசுவசித்து உலகத்தின் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகின்ற புதிய நெறியைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அவரையே வாக்களிக்கப்பட்ட மெசியாவாக நம்புகின்றார்கள். எனவே திருவிவிலியத்தில் முன்னுரைக்கப்பட்ட மெசியாவின் பிறப்பே கிறிஸ்தவ விசுவாசிகள் மத்தியில் கிறிஸ்துபிறப்பு பெருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

## கிறிஸ்து பிறப்புத் திருவிழாவும் பாரம்பரியமும்

தொடக்க காலத்தில் மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழ்த்திசை ஞானிகள் யூதர்களின் அரசராகப் பிறந்திருப்பவரை பார்க்கவந்த நிகழ்வே கிறிஸ்து பிறப்பு விழாவாக ஜனவரி மாதம் 6ம் திகதி கொண்டாடப்பட்டு வந்தது. இம்முறைமை கீழைத்தேய திருச்சபைகளில் காணப்பட்டு வந்தது. டிசம்பர் மாதம் 25ம் நாள் கிறிஸ்மஸ் பண்டிகையாகக் கொண்டாடப்படும் முறைமை கி.பி. 4ம் நூற்றாண்டு முதல்தான் தோற்றம் பெற்றது. டிசம்பர் 25ம் நாளை வெற்றிகொள்ள முடியா சூரியக் கடவுளின் விழாவாக உரோமையர்கள் கொண்டாடிவந்தார்கள். அந்த விழாவின் பின்னணியில் கிறிஸ்துவே இந்த உலகத்தின் ஒளி ஆவார் என்கிற சிந்தனையோடு கிறிஸ்மஸ் விழா உதயமானது. இதனைக் குறித்து ஜோன் கிறிஸ்ரோசம் என்பவர் "நம் ஆண்டவரைப் போன்று வெற்றிபெறக்கூடியவர் யார் அவரே நீதியின் சூரியன்" எனக் குறிப்பிடுகின்றார். மேலும் கிறிஸ்து பிறப்பை அவர் தனது வார்த்தைகளில் குறிப்பிடும்பொழுது "இந்த இரவில் (கிறிஸ்மஸ் இரவு) மனித மனம் கற்பனை பண்ணமுடியாத அல்லது எதிர்பார்க்கமுடியாத ஒன்றைக் கடவுள் நம் மீது பொழிந்தார்" என்று புகழாரம் சூட்டுகின்றார். இதனைப் புனித அகுஸ்தீனார் என்னும் அறிஞர் "வார்த்தைகளில் வடிக்கமுடியா இறைஞானம் அழகுக் குழந்தை வடிவில் தவழ்ந்தது" என்று (கிறிஸ்மஸ் விழாவின் பெருமையினை) வலியுறுத்துகின்றார். இவ்வாறு தொடங்கிய கிறிஸ்மஸ் விழாவானது இன்று பல்வேறு நாடுகளிலும் அந்தந்த நாடுகளின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப வெவ்வேறு முறைமைகளில் கொண்டாடப்படுகிறது. எது எவ்வாறு இருந்தபோதிலும் இவ்விழாவில் மையச் செய்தியாகிய கிறிஸ்துவே இவ்வுலகின் மீட்பர் என்னும் செய்தி எடுத்துரைக்கப்படுகின்றது.

### முடிவுரை

உலகமெல்லாம் பரந்து வாழுகின்ற கிறிஸ்தவர்கள் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவினை தங்கள் வாழ்வின் மீட்பாகக் கொண்டாடுகின்றார்கள். கிறிஸ்துவைத் தங்கள் வாழ்வின் மீட்பராகக் கொண்டாடுகின்ற பொழுதும் இவ்வுலகில் வாழும் ஏனைய சகோதர சகோதரிகளோடும் நல்லுறவிலும் ஒற்றுமையிலும் வாழவே விரும்புகின்றார்கள். கிறிஸ்துவினுடைய பிறப்பின் நோக்கம் மாந்தர் அனைவரும் ஒன்றாக இணைவதும் மகிழ்ந்திருப்பதுமே ஆகும்.

அந்தவகையில் கிறிஸ்மஸ் பண்டிகை மத நல்லிணக்கத்தையும் இன நல்லுறவையும் வளர்க்கின்ற ஓர் உன்னத விழாவாகும்.

இதனால்தான் வானவர் தூதரணி கிறிஸ்து எனும் மெசியாவின் பிறப்பின்போது "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:13-14) என்று பாடினார்கள். எனவே கிறிஸ்மஸ் மகிழ்வின் விழா, மாந்தர் அனைவரும் மகிழ்ந்திருக்கும் விழா, மகிழ்ந்து கொண்டாடி இன்புறுவோம். கிறிஸ்மஸ் நல்வாழ்த்துகள்!

## கடுகுக் கதை 22 சிங்காரம்

அன்டன் அந்தப் பழைய அப்பியாசக் கொப்பியைப் புரட்டிப் பார்த்தார். அதில் சில குறிப்புகள் எழுதப் பட்டிருந்தன. அன்டனுடன் படித்த நண்பன் சிங்காரம் பற்றி எழுதிய குறிப்புகளே அவை.

2000.05.02 - காலை 10.00 மணி: சிங்காரத்திற்கும் சரோஜாவிற்கும் திருமணம் மாமாங்கக் கோவிலில்.

2002.08.04 - சிங்காரம், சரோஜா தம்பதிகளுக்கு புத்திரன் ஜனனம். ரோஹினி நட்சத்திரம்.

2004.01.10 - கல்லடி கடற்கரை வீட்டைச் சீதனமாக இன்னும் எழுதித் தராததால் மகனையும் சரோஜா வையும் தகப்பன் வீட்டிற்கு அனுப்பிவிட்டான்.

2004.12.20 - கல்லடி கடற்கரை வீடு எழுதிக் கொடுக்கப்பட்டதால் மீண்டும் மனைவி, மகனுடன் இணைந்து அவ்வீட்டில் புதுக்குடித்தனம்.

2004.12.26 - சுனாமி! சரோஜாவும் இல்லை மகனும் இல்லை வீடும் இல்லை எல்லாம் கழுவப்பட்டுவிட்டது. தப்பிவிட்ட சிங்காரத்தின் மனமும்தான் கழுவித் தூய்மையாக்கப்பட்டுவிட்டது.

அன்டன் நிமிர்ந்து கலண்டரைப் பார்த்தார். 2009.12.26.

வாயிற் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"வா! சிங்காரம்... வா"



"அண்ண! எனக்கொரு உதவி வேணும்"

"என்னென்டு கேளு!"

"எனக்கு இனி தனிய வாழ ஏலா. சரோஜாவும் மகனும் போனபிறகு எல்லாம் போய்த்து. எனக்கு நல்ல பொம்பிள இருந்தா பாருங்கண்ண! ஆனா இரண்டு விடயம் பொம்பிள நல்ல வடிவா இருக் கணும். அதோட புளியந்தீவில நல்ல பெரிய 'அப்ஸ் ரியார்' வீடாகச் சீதனம் வேணும்"

சிங்காரம் போனபிறகு அன்டன் அந்தக் கொப் பிய எடுத்து 2004.12.26ம் திகதி குறிப்பில் பின்வரும் வசனத்தை மட்டும் வெட்டிவிட்டார்.

'~~தப்பிவிட்ட சிங்காரத்தின் மனமும்தான் கழுவி தூய்மையாக்கப்பட்டுவிட்டது~~'

2009.12.26 க்கு ஒரு குறிப்பையும் எழுதினார். இன்னொரு சுனாமிக்கோ, பூகம்பத்திற்கோ 'சான்ஸ்' உண்டு.

- பற்றி

# இயேசுவின் பிறந்தநாள்

அன்று பெத்லகேமில்
மரத்துப்போன
மனித கூட்டத்திற்கு
வெறுத்துப்போனது
பிறர் சினேகம்
சிறிய இடத்திற்கே
யாசகம் கேட்டார் சூசை!
ஆசை கொண்ட மாந்தர்க்கோ
மரியாளின் நிறைமாதக் கர்ப்பம்
புரியவில்லை
கண் தெரியவில்லை
இறுதியில் மாகுளிரில் மாடடையில்
மாக்கள் மத்தியில் மாமரி மைந்தன்
துன்பச் சகதியிற் துவண்ட நாளை
இங்கு இன்பமாக
புத்தாடை அணிந்து
அறுசுவை உணவுகள் உண்டு
அகமகிழ்ந்து அக்களிக்கின்றோம்
பேரூந்தில்...
மரியன்னைபோல் ஒரு மாது
நிறைமாதக் கர்ப்பிணியாய்
நிற்பது கண்டும் நித்திரை செய்கிறோம்
எங்கிருந்து வந்தோம்
வானத்திலிருந்தா? வயிற்றில் இருந்தா?

எமக்கு மறதி அதிகம்
இயேசு சொல்கிறார்
எனது பிறப்பு ஏழ்மையாயிற்று
எனது பிறந்தநாளிலாவது
கைவிடப்பட்ட வயோதிபரை நினை
பெற்றோரை இழந்த
சிறார்களை நினை
அகதிகள் முகாம்களில்
அவலமுறுவோரை நினை
பாலன் குடிசையில்
என்னைக் கண்டு
எனது கால்களுக்கு
முத்த மழை பொழியாதே
வயோதிபர் இல்லத்தில்
நான் இருக்கிறேன்
சிறுவர் இல்லத்தில்
நான் இருக்கிறேன்
அகதிகள் முகாமில்
நான் இருக்கிறேன்
எனக்குப் பிறந்நாள் பரிசாக
என்ன கொண்டுவருவாய்?
வா.... வா... வருவாயா..?
ஆவலாகக் காத்திருப்பேன்
எனது ஏழ்மையான பிறப்பின்
இரகசிமே இதுதான்
புரிகிறதா....? - இயேசு

**- வயலற் சறோஜா**

-








இவ்வாண்டை சர்வதேச குருக்கள் ஆண்டாக கத்தோலிக்கத் திருச்சபை பிரகடனம் செய்திருப்பதையொட்டி குருக்களைக் கௌரவிக்கும் வண்ணமாக அருட்பணி ஜெரமியா சைமன் அரசரெத்தினம் அடிகளாரைச் சந்தித்தோம். ஆயர் இல்லத்தில் நான்காம் இலக்க அறையில் அவரைச் செவ்விகாணும் பொருட்டுச் சென்றபோது வைத்தியசாலையிலிருந்து அப்போதுதான் திரும்பியிருந்தார். கண்பார்வை சற்று மங்கியும், கேள்விப் புலன் சற்றுப் பாதித்திருந்தபோதும் எமக்குச் செவ்விகாண உற்சாகமாகச் சம்மதம் தெரிவித்தார்.

**✤ வணக்கம் சுவாமி!**

☀ வணக்கம்!

**✤ இந்தக் குருக்கள் ஆண்டில் உங்களைச் செவ்விகாண இணங்கியதையிட்டு நன்றி கூறுகின்றோம். முதலில் உங்களின் இளமைப் பருவம் பற்றிச் சற்றுக் கூறுங்கள்.**

☀ ஒரு பேட்டி கொடுக்கும் அளவிற்கு நான் பெரிதாக எதையும் சாதித்தவன் அல்ல. 1924ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி ஊர்காவற்றுறையில் உள்ள நாரந்தனை என்னுமிடத்தில் பிறந்தேன். எனது தகப்பனாரின் பெயர் சைமன் தம்பிராசா. அவர் ஒரு விதானையார். நான் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை. இரண்டு அண்ணன்மாரும் இரண்டு தம்பிமாரும் ஒரு தங்கையும் எனக்கிருந்தனர். அவர்களில் இருவர் மட்டுமே தற்போது உயிருடன் உள்ளனர்.

**✤ உங்களின் ஆரம்பக் கல்வி பற்றிச் சொல்லுங்கள்**

☀ எனது ஆரம்பக் கல்வியினை பண்டத்தரிப்பு அந்தோனியார் பாடசாலை, மாதகல் புனித ஜோசப் இருமொழிப் பாடசாலை, இளவாலை ஹென்றிக் கல்லூரி என்பனவற்றில் பெற்றுக்கொண்டேன். தொடர்ந்து 6ம் வகுப்புத் தொடக்கம் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வியைப் பெற்றுக் கொண்டேன்.

**✤ உங்கள் குருத்துவக் கல்வி பற்றி...**

☀ 1936ம் ஆண்டில் இளங்குருமடத்தில் இணைந்து கொண்டேன். பின்னர் பொரளையில் உள்ள புனித பேர்ணாட் செமினரியில் நான்காண்டுகள் கற்றேன். அதனைத் தொடர்ந்து பெங்களூரில் உள்ள சென் பீற்றர் செமினரியில் இரண்டு வருடங்கள் படித்தேன். 1951ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் திகதி தூத்துக்குடி உப மேற்றிராணியார் மேதகு தோமஸ் பெர்ணான்டோ ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டேன். 1968ம் ஆண்டுவரை தூத்துக்குடி மேற்றிராசனத்தில் உள்ள பல பங்குகளிலும், பாடசாலைகளிலும் பணி புரிந்தேன்.

**✤ அப்படியானால் எமது மறைமாவட்டத்திற்கு எப்படி அர்ப்பணமானீர்கள்?**

☀ நவம்பர் 1968ல் மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இறைபணிக்காக இணைந்துகொண்டேன். முதன்முதலில் மூதூர் பங்கில் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு எட்டுவருடம் பணிபுரிந்தேன். அங்குதான் எனது குருத்துவாழ்வின் வெள்ளி விழாவும் இடம்பெற்றது.

தொடர்ந்து கன்னியா வெல்வேரியில் 2 வருடங்களும் 1978ம் ஆண்டிலிருந்து ஐந்து வருடங்கள் சின்னக்கடைப் பங்கிலும் பின்னர் 1983ம் ஆண்டிலிருந்து ஐந்து வருடங்கள் தேற்றாத்தீவு பங்குத்தளத்திலும் தொடர்ந்து 1988ம் ஆண்டிலிருந்து

ஓய்வுபெறும்வரை தாண்டவன்வெளிப் பங்கிலும் கடமை புரிந்தேன்.

**உங்கள் வாழ்க்கையை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு ஏற்பட்டது?**

நான் சிறுவயதில் சற்றுச் சுகவீனமாக இருந்தேனாம். அதன் பொருட்டும், என் தாயாரின் விருப்பத்தையிட்டும் என்னைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது.

**'சீலோவாம்' மருத்துவ மனையை நீங்கள் ஆரம் பித்தாகக் கேள்விப்பட்டோமே...?**

ஆமாம்! 1991ம் ஆண்டென எண்ணுகிறேன். நானும் வைத்தியர் எப்.எக்ஸ்.சேவியர் அவர்களும் இன்னும் சில அன்பர்களும் இணைந்து 'சீலோவாம்' சுகாதார நிலையத்தை ஆரம்பித்தோம். அதன்மூலம் பெரும் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தது.

**தங்களது 'பரிபூரணம்' என்ற இல்லம் பற்றி...**

1997ம் ஆண்டு ஏப்ரல் 26ம் திகதியன்று வயோதிபர்களுக்கான 'பரிபூரணம்' என்ற இல்லமொன்றை ஆரம்பித்தேன். ஓய்வூதியம் பெறும் வயோதிபப் பெற்றோர்கள் அங்கிருந்தனர். பிள்ளைகள் பெற்றோர்கள் அனைவரையும் விசாரித்ததன் பின்னரே அவர்களை இணைத்துக்கொள்வேன். அது இவ்வாண்டு ஜனவரியுடன் மூடப்பட்டுவிட்டது.

**பெற்றோர்களைக் கொண்டு வந்து சேர்க்கும் பிள்ளைகள் மட்டில் நீங்கள் கோபம் கொள் வதில்லையா?**

பெற்றோரைப் பராமரிக்கவேண்டியது பிள்ளைகளின் கடமைதான். ஆனால் இன்றைய காலகட்டம் முன்னரைப்போல் இல்லைதானே. பெண்களும் வேலைக்குப் போகவேண்டும். அத்துடன் அவர்கட்கும் சிறு பிள்ளைகள் உண்டு. எனவே பெற்றோரைப் பாதுகாப்பதும் அவர்கட்குச் சற்று சிக்கலாக இருக்கலாம் அல்லவா!

**உங்கள் பணிவாழ்வில் நீங்கள் பெற்றுக்கொண்ட மனநிறைவு என்ன?**

எனது மனச்சாட்சியின்படி தொண்டு புரிந்துள்ளேன். இந்தியாவில் பல பாடசாலைகளை ஆரம்பித்துள்ளேன். கடவுளின் சித்தத்திற்குப் பணிந்து நடந்துள்ளேன். வாழ்க்கையில் துன்பமும் வரும், இன்பமும் வரும் இரண்டும் நன்மைக்கே! எனக்கு கண்பார்வை குறைவு. அதனை 'குதிரைக்குக் கொம்பு இல்லாததுபோல்' என்று எண்ணிக்கொள்வேன்.

**நீங்கள் குருக்களுக்குச் சொல்லும் அறிவுரை என்ன?**

ஒரு குருவிற்கு முதற் கடமை தேவதிரவிய அனுமானங்களை வழங்குதல். குறிப்பாகத் திருப்பலியை நிறைவேற்றுதல். மக்களை நேசிக்க வேண்டும். ஏனைய பணிகள் எல்லாம் இரண்டாம் பட்சம்தான். சமூகப் பணிகள் தேவைதான். ஆனால் அதனைவிட தேவதிரவிய அனுமானங்கள்தான் மிக முக்கியம். இதனை எல்லாக் குருக்களும் புரிந்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

**பொதுநிலையினருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

குருக்களின் குறைகளைப் பெரிதாக எடுக்கக் கூடாது. அவர்கள் உங்கள் பிள்ளைகள். அவர்களுக்காகச் செபியுங்கள். இறைசித்தம் நிறைவேறும்படி குருக்களுக்காக மன்றாடுங்கள்.

**உங்கள் தற்போதைய பொழுதுபோக்கு என்ன?**

(சிரிக்கின்றார்) குருக்களுடன் கதைப்பது தான். இரண்டு சின்ன வானொலிப் பெட்டிகள் உள்ளன. ஒன்றில் 'சக்தி' வேலை செய்யும். மற்றதில் 'சூரியன்' கேட்பேன். ஏனெனில் மீற்றர் பிடிப்பது எனக்குக் கஷ்டம்.

*பேட்டியின் இடையில் தொலைபேசி அழைப்புகளுக்கும் பதில் சொல்கிறார். இறுதியில் "தொண்டனின்" சார்பில் நன்றிகூறி விடைபெற்றோம். வெளியில் கடும்மழை பெய்துகொண்டிருந்தது.*

- ஆழியோன் -

இந்து மக்கள் மறுபிறவி என்பதில் நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள். ஒரு பிறப்பில் நமது வாழ்வு எப்படி அமைகிறதோ அதற்கேற்ப மறுபிறவியில் நமக்கொரு வாழ்வு கிட்டும் என்பது அவர்களது நம்பிக்கை.

சில காலங்களுக்கு முன் பௌத்தராகிய ஓர் அதிகாரி, தாம் சிறைப்பிடித்திருந்த கைதிகளிடம், "போன பிறப்பில் வாயில்லாத ஜீவன்களைக் கூட்டிலடைத்து வருத்தியதன் பலனைத்தான் இன்று அனுபவிக்கிறீர்கள்" என்று பேசக் கேட்டிருக்கிறேன். நமக்கென்று ஒரு பிறவி முன்பிறவியோடு தொடர்புடையதாக இருக்கிறது என்பதில் இவர்களுக்கு நம்பிக்கை. நமக்கும் இவ்வாறான நம்பிக்கை - மறுபிறப்புப் பற்றி இருந்தாலும் அது வித்தியாசமானதொரு நம்பிக்கையின் ஊற்றினின்று வருகின்றது.

இவ்வுலகில் நல்வாழ்வை நாம் சரியாக வாழ்ந்திருந்தால் நமது இந்த வாழ்வு முடிந்துவிட்ட பின்னரும், கிறிஸ்துவின் மறுவருகையின்போது அவரோடு நிலையான வாழ்வைப் பெறும்படிக்கு நாமும் உயிர்ப்பிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையுடன் அந்த மறுவாழ்வை எதிர்கொள்ள ஆசைப்படுபவர்கள் நாங்கள்.

நமது இரட்சகர் இயேசுவின் மண்ணகத்தின் வருகை, ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும், நற்செய்தியை அனைத்து மக்களுக்கும் அறிவிக்கவும், மீட்பைப் பெற்றுத்தரவும் என்று எலியாவின் ஏட்டிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகின்றோம். புனித பவுல் அடிகள் தெசலோனிக்கருக்கு திருமடல் எழுதி மீண்டும் வரும் கிறிஸ்துவை எதிர்கொண்டு செல்ல, நாமும் அவருடன் இணைந்த வாழ்வை வாழ்ந்தவர்கள் என்ற மட்டில் உயிர்ப்பிக்கப்படுவோம் என்று அவர்களை இறைவார்த்தையின் வழியில் வாழ உற்சாகப்படுத்துகின்றார். தூய வாழ்வு ஒன்றே எக்காலமும் இறைவனுடன் எம்மை ஒன்றுசேர்க்கும் என்பதை அவர் ஆணித்தரமாகக் கூறிவைக்கின்றார். கிறிஸ்துவின் மறுவருகையிலும் மீட்பு உண்டு! அவர் எத்தனை முறை வந்தாலும் அத்தனை முறையும் மனுக்குலம் மீட்சி காணும் என்பது நிச்சயம்! அவர் மீட்பளிக்கும் தேவனாக இருக்கின்றார்



என்பதால், அவர் வருகையின்போதெல்லாம் மீட்பு அவருடன் கூடவரும் என்பது திண்ணம்.

எனவே, திருப்பாடல் சொல்வதுபோல ஆண்டவர் திருப்புகழை நாம் உரத்துப் பாடவேண்டியவர்கள். அவர் தரும் மீட்பை எல்லா இன மக்களுக்கும் உரத்துக் கூறி, அவர் மாட்சியைப் பறைசாற்ற நாம் அழைக்கப்படுகின்றோம். அந்த இறைவனின் அழைப்பின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொண்டவர்களாக, அவரில், அவரோடு வாழ எதிர்பார்க்கின்றவர்களாக, நாம் வாழ்வது நிச்சயமானால், அந்த வாழ்வை நாம் மற்றவருக்கும் எடுத்துச்சொல்லி மீட்பின் தேவனுடைய புகழைப் போற்றிப் பாடவேண்டும்.

இறப்பு என்பது நமக்கு அச்சந் தரும் ஒன்றாயிராமல், அவருடைய தீர்ப்பிற்கு முகங்கொடுக்க அஞ்சாத மக்களாக நாம் இருக்கவேண்டுமானால், நமது வாழ்வை நாம் தூய்மையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். கடவுளுக்குகந்த வாழ்வு வாழ்பவர்களே அவர் தரும் அருளை அனுபவிக்கவும், மீட்பைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். அப்படிப்பட்டவர்களால்தான் கிறீஸ்துவின் மறுவருகையை ஆசையோடு எதிர்பார்த்திருக்க முடியும்.

மரணம் என்பது முடிவுரையல்ல, அது ஒரு கால்மாத்திரைதான். வாழ்வு எனும் வரலாறு, மரணம் என்கின்ற அத்தியாயத்துடன் முடிந்துவிடாமல் அடுத்த அத்தியாயம் நோக்கி நம் கதையை நகர்த்திச் செல்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளவும், அதை ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது. புதிய வானத்தையும், புதிய பூமியையும் நமக்குத் தரும் இறைவன் இயேசுவின் மறுவருகை புதிய மீட்சியை நமக்குப் பெற்றுத்தரும் என்னும் நம்பிக்கையுடன், அசையாத விசுவாசத்துடன், அந்த உச்சக்கட்டம் நோக்கி நமது வாழ்வு எனும் வரலாற்றுக் கதையை நாம் தொடர்ந்து எழுதிக்கொண்டு போவது அவசியம்.

நாம் இப்போது வாழும் ஒவ்வொரு கணத்திலும், நாம் எடுக்கும் முடிவுகளிலும் சரி, மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் சரி அடுத்தது என்ன? இதன் பிறகு என்ன? என்ற கேள்விகளை எழுப்பிப் பதில் தேட முனைவோமானால், நிச்சயம் தவறுகள் இல்லாத வாழ்வை நாம் முன்னெடுத்துச் செல்ல பெரும் துணையாக இருக்கும். எத்தனை பேரைக் கண்டோம்? எத்தனை வரலாற்றைப் பார்த்தோம்? என்னால் முடியும் என்று மார் தட்டியவர்கள்கூட கடைசியில் என்ன என்ற கேள்விக்குப் பதிலின்றிப் போனதையே நாம் கண்டிருக்கிறோம். நாம் யாருக்கும் சவால் விடத்தேவையில்லை, யாரையும் மனம் நோகப் பண்ண அவசியமுமில்லை. இறைவன் தந்த வாழ்வை ஏற்றுக்கொண்டு அவர் வழியில் வாழ்வது ஒன்றுதான் இக்காலத்திலும் சரி, எக்காலத்திலும் சரி நமக்கு மீட்சியையும், ஈடேற்றத்தையும் பெற்றுத்தரும். இந்த உறுதியை நம்மில் வளர்த்துக்கொண்டு அடுத்த கணம் நோக்கி துணிவுள்ளவர்களாக நம் வாழ்க்கையை நகர்த்திச் செல்வோம்.

**"நமக்குத் தந்தது எல்லாம் அவரே,**
**தரப்போகின்றவரும் அவரே!**
**சொந்தமல்லாத இந்த உலகத்திலே, மூட்டை கட்டிச் செல்ல யாதுமில்லை!**
**படைத்தவன் வழிப் பயணம் ஒன்றே உரிய இடத்திற்கு நம்மைக் கூட்டிச் செல்லும்!"**

**– ஆனந்தா ஏஜீ. இராஜேந்திரம் –**



## குறும்(புப்)பா - 29

பாலனுக்(குக்) குடில்தானே வீடு
பக்கத்தில் துணையாடு மாடு
ஞாலத்தில் அவர்பிறப்பைக் கொண்டாடக் குடிகூத்து
கும்மாளம் அதுபெரும் பாடு

**~ மலர் ~**

# துயரந்தணிக்க வருக...!

கடும் வெயிலில் நடந்து, நடந்து...
கொடும் பாலை கடந்து
நெடுநாளை இழந்து
ஈற்றில் -
களைப்பாறக் கிடைத்ததொரு நிழல்மரம்
நின்றது நிமிர்ந்து
அந்தோ!
அநீதியாய்ப் பொங்கிவந்த புயற்காற்றுப்
பூதம்போல் எழுந்தந்தப்
பூந்தருவைச் சாய்த்ததையோ....!?
ம்..ம்..ம்....
நின்றாற நிழலின்றித்
திண்டாடும் எங்களது
மன்றாட்டம் கேட்டருள
மரிமடியில் தவழ்பவரே!
விரிசுடரே! விண்ணொளியே!
மறுபடியும்வா விரைந்து! மறுபடியும்வா விரைந்து!
இருட்டு வழியில்
குருட்டு விழியராய்
புலர்வு காணப் புறப்பட்ட
எங்களது கைகளுக்கு நீயளித்த கைவிளக்கு
நின்றெரிந்த நெய்விளக்கு
பேய்பிடுங்கி வீசியதால்
பேரிருளில் வாயடைத்து வழிமறந்து
கலங்குகின்றோம்.
கைவிளக்காய் நீ வந்தெம்
கரங்களிலே நின்றொளிர
மெய்விளக்கே! விண்சுடரே!
மறுபடியும் வா விரைந்து
முட்கம்பிக் கூண்டுக்குள்
முனகிக்கிடக்குமெங்கள் சுற்றங்கள்
சுதந்திரமாய்ச் சொந்த மண்ணில்
வாழும் நாளை வழங்கியருளப்
பாலகனே வா விரைந்து
கண்ணீர் வெள்ளத்தில் கத்தித்திளைத்து
குருதிப்புனலில் நித்தம் குளித்து
ரணங்களைச் சுமந்து சுமந்து
மரணத் தீயில் கணமும் வெந்து
பூவுந்தளிரும், கிளையும் வேரும்
நாளும் சிதைய, இதயம் வெடித்தோம்
வாழும் நாளின்
வரவை எண்ணி ஏங்கித்துடித்தோம்
மாசற்ற பாசநிலவே!
ஏசுபாலா...!
இனியுமேன் தாமதம்?
இனிய விடியலாய்
எம்முன் உதிப்பாய்
துயரம் தணிப்பாய்

- கவிஞர் நிலாதமிழின்தாசன் -



# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 06

## வீரமாமுனிவரின் சமுதாயப் பணித் தகவல்கள்

அவரது வாழ்க்கையில்:

01. ஒரு கிறித்தவன் தன்னை முஸ்லிம் எனச் சொல்லிக்கொண்டு மதுரைநாயக்கரின் சேனைத்தளபதியிடஞ் சென்று வீரமாமுனிவர் முஸ்லிம்களை வதைப்பதாகவும் அவர் அளவற்ற பொன்னும் பொருளும் வைத்திருப்பதாகவுஞ் சொன்னான். அவனும் தன் படையை அனுப்பி, அவரிடம் உள்ள பொருள்களைக் கவர்ந்துவரச் செய்தான். சென்ற வீரர்கள் அங்கேதும் பொருள் இல்லாததால் கோயிலை இடித்துக், கோயிற் பொருட்களைக் கொள்ளையடித்து, அவரையும் கைது செய்து வந்தனர். அவன் அவருக்கு மரண தண்டனை விதித்தான். இதனை அறிந்த குருக்கள்பட்டி மக்கள் வாதாடி அவரை விடுதலை செய்தனர். அவர் வந்து படையினரால் இடிக்கப்பட்ட கோயிலைப் புதுப்பித்த பின்னர் ஒரு வருடம் ஓய்வு எடுத்துக்கொண்டார்.

02. கோனான் குப்பத்தில் ஊழியம் செய்யும்போது முகமதிய படைவீரர்களின் பாளையத்திற் புகுந்து காளைகளைக் களவாடியதற்காகப் படையினர் ஆங்குள்ள கிறித்தவர்களைத் தாக்கினர். அவர் படைத்தலைவனிடஞ் சென்று வாதாடி அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கச் செய்தார். தளபதியிடம் உண்மை நிலைமையை விளக்கிக் காப்பாற்றினார். சாந்தா சாகிப்பின் நட்பைப் பெற்றார். அவன் இவரைத் திவான் பதவியில் அமர்த்தி இஸ்மாதி சந்நியாசி (தூய துறவி) மதிப்பளித்து வருடம் 12000 ரூபா வருமானந் தரும் பூங்குளம், மால்வை, அரசூர், நல்லூர் ஆதிய நான்கு கிராமங்களை மானியமாகக் கொடுத்தான். அத்துடன் மாதம் 350 சாந்தொம் நாணய வேதனமும் அவன் சரணடையும்வரை அளித்தான். இவ்வண் மக்களது வாழ்விலே பங்கேற்று மனிதநேயங் கொண்டவராக வாழ்ந்தார்.

வீரமாமுனிவரைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதானால், பின்வரும் நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும், மலர்களும் உறுதுணையாக இருக்கும் என்பதால், அவற்றின் விபரங்கள் பின்னாற் தரப்படுகின்றன. இவைகளில் உள்ள தகவல்கள் அவரது வாழ்க்கை, அவர் செய்த பணிகள் என்பவற்றை மட்டுமல்ல, பின்வரும் வரலாற்று நிலைகளையும் விளக்க வல்லன.

1. வீரமாமுனிவர் காலத்துத் தமிழ் மொழியின் நிலைப்பாடு. 2. அவர் காலத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ப் புலவர்கள் பற்றிய தகவல்கள். 3. அரச, சமுதாய ஒழுங்குகள். 4. கிறித்தவ மதம் பரம்புதல் என்பன போன்ற வரலாற்று உண்மைக் கூறுகளும், அவற்றை ஆராய்வார்க்கு ஏற்ற தகவல், தரவுகளும் இவற்றில் உள்ளன. பின்வருவன உரைநடையில் படைக்கப்பட்ட அவரது வாழ்க்கை வரலாற்று நூல்கள்.

1. **தமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர்:** 1950 ஜே.ஜி.சுந்தரம். தமிழ் இலக்கியக் கழகம் தூத்துக்குடி

2. **தமிழ் வளர்த்த தைரியநாதர் என்னும் வீரமாமுனிவர்:** 1955. மீள்பதிப்புகள்: 1968, 1970. பண்டாரம் நம்பியார், ஜெயகுமாரி ஸ்ரோர்ஸ், நாகர்கோவில்.

3. **வீரமாமுனிவர் 1970:** அ.மாரிமுத்து, வள்ளுவர் பண்ணை, 10-2, மெயின் ரோடு, ஐ.டி நகர். 78 பக்கங்கள்.

**4. வீரமாமுனிவர் சரித்திரம்:**
ஆ.முத்துசாமிப்பிள்ளை, ஆங்கில மொழி வழி 1840.

**5. நாட்டுக்கு உழைத்த நல்லவர் வீரமாமுனிவர்:** 1976, பூவண்ணன், பழனியப்பா பிரதர்ஸ், 39 பக்கங்கள்.

## செய்யுள் நடை

1. **வீரமாமுனிவர் கலம்பகம்:** துரை சுந்தரமூர்த்தி (எழில்வண்ணன்) தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி, 1971, 73 பக்கங்கள்.

2. **வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழ்:** இ.சண்முகம்

3. **தமிழுழுகி: ஐந்தாவது வீரமாமுனிவர் காண்டம்,** 2008, ஈழத்துப்பூராடனார், சீவன பதிப்பகம், கனடா

## சிறப்பு மலர்கள்

1. **சுவாமி வீரமாமுனிவர் நினைவு மலர்:** கத்தோலிக்க சேவா சங்கம், நல்லாகுளம், மதுரை, 1944.

2. **வித்தகர் வீரமாமுனிவர் சிறப்பு மலர்:** மூன்றாம் நூற்றாண்டு நிறைவு நினைவு விழா பாளையங்கோட்டை, 1977.

**தொடரும்...**

**கனடாவிலிருந்து........... ஈழத்துப் பூராடனார்**

# வழித்துணை

(காதில் விழுந்த கதையொன்று)

ஆசீர்வாதம் நல்லா வயசுபோன மனிசன். பேரப் பிள்ளையின்ர பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பழைய கூட்டாளி ராசாவையும் சந்தித்த இரட்டை மகிழ்ச் சியில் உற்சாகபானத்தில் கொஞ்சம் அதிகமாகவே உறிஞ்சினார். விளைவு பாசிபிடித்த கிணற்றடியில் வழுக்கி விழுந்து படுத்த படுக்கையாகிப் போனார். "அப்புவுக்கு தண்ணி வென்னியிறங்குதில்ல சுறுக் காப்போய் சுவாமியாரக் கூட்டிற்று வாடி புள்ள" என்றாள் மூத்த மகள். "இப்பவே போறன். சுவாமி இரிக்காரோ என்னமோ தெரியா" என்றபடி ஓட்டமும் நடையுமாய்ச் சென்று விடயத்தைக் கூறி அழைத்து வந்தாள் இளையவள். மகன்மார், மகள்மார், பேரப் பிள்ளைகள் என்று ஒவ்வொரு வேலையில் ஓடியாடித் திரிந்தனர். அவன்மட்டும் கிழவர் தலைமாட்டில் அசையாமல் நின்றான். நோயில் பூசுதலை முடித்துக் கொண்ட சுவாமியாரின் மனதில் அந்தக் கேள்வி புதிராகவே இருக்க, மெதுவாக "அது சரி... எனக் குத்தான் உங்கட குடும்பத்தில எல்லாரையும் நல் லாத் தெரியுமே... இவர எனக்குத் தெரியாதே" என்றார் மூத்த மகளிடம். "அவனா பாதர் நம்மட ஊரில பேரெடுத்த கள்ளன். எப்பிடிப்பட்ட ஆமப் பூட்டையும் ஒரு கம்பித் துண்டால சிம்பிளாத் துறந்து போடுவான். இவன்ர கைபட்டா எப்பிடியாப்பட்ட கதவுப் பூட்டும் வாய் பிளந்துரும் தெரியுமா பாதர்" என்றாள். "அப்ப... இவர் இங்க எதுக்காக..?" சுவாமியார்



கேட்டார். "அதுவா பாதர், எங்கட அப்பு நல்ல வயசாளி. கொஞ்சம் அப்பிடியுப்பிடித்தான் சீவிச்சவர். இப்ப கண்ண மூடப்போறார். அப்பு மோட்சத்துக்கு போகேக்குள்ள தப்பித்தவறி கதவு பூட்டிக்கிடந்தா அது எப்பிடியாப்பட்ட பூட்டெண்டாலும் இவன் சிம் பிளாத் திறந்து மோட்சத்துக்குள்ள அப்புவ விட் டிருவான். அதுக்காகத்தான் இவனக் கூட்டிவந்து வச்சிருக் கிறம்" என்றாள். சுவாமியார் திகைத்துப் போனார்.

**– பைந்தமிழ்குமரன் டேவிட் –**

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## குப்புறப் படுத்துச் செய்யும் ஆசனங்கள்

### புஜங்காசனம்



### செய்முறை

- விரிப்பின் மீது குப்புறப்படுத்து கைகளைத் தலைக்கு மேலே நேராக நீட்டி, கால்களை ஒன்று சேர்த்துவைக்கவும்.
- நாடியைத் தரையின் மீது வைத்து இரண்டு உள்ளங்கைகளையும் மார்பின் அருகே கொண்டு வரவும்.
- உள்ளங்கைகளும் கைமுட்டிகளும் உடலில் ஒட்டியவாறு தரையில் படிந்திருக்கவேண்டும்.
- முன் பாதம் தரையில் படுமாறு பாதங்கள் இரண்டும் இணைந்திருக்கவேண்டும்.
- கைகளைப் பூமியில் அழுத்தி, மெதுவாகத் தலையை நிமிர்த்தி, பின் மார்பையும் உயர்த்தவும்.
- இப்போது உங்கள் உடல் பாரம் முழுவதும் உங்கள் வயிற்றின் மீது இருக்கவேண்டும்.
- 10 முதல் 20 வினாடிகள் வரை ஆசன நிலையில் இருக்கலாம்.
- சுவாசத்தை இழுத்து, முதுகை வளைத்து, சுவாசத்தை மெதுவாக வெளிவிடவும்.
- மெதுவாக மார்பையும் தலையையும் தரையை நோக்கி இறக்கி, நாடியை விரிப்பின் மீது வைத்து மகராசன நிலையில் ஓய்வு எடுக்கவும்.
- இதுபோல் மூன்று முறை செய்தால் போதுமானது.

### குறிப்பு

- சர்ப்பாசனத்தில் கிடைக்கும் பலன்கள் யாவும் இவ்வாசனத்திலும் கிடைக்கிறது.

### மாற்று ஆசனங்கள்

- யோகமுத்ரா
- பாதஹஸ்தாசனம்

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



"அட இந்த எழுத்தாளர் எல்லோருக்கும் தெரிந்தவராச்சே! இப்போது ஏன் நடுத்தெருவில் நிற்கிறார்?"

"அண்மையில் அவரது நூல் ஒன்று வெளிவந்தது"

• மணி

# ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



7

## செண்பகக்குழல்வாய்மொழி

(வேறு)

### புத்தளம் நோக்கிப் புனிதன்

அன்னை மரியாளே
அவர்களுக்குத் தாய்த்தெய்வம்
உண்ண மறந்தாலும்
உயர்பக்தி வழுவாது
விண்ணி லிருந்துஅவள்
விதைத்திட்ட செபமாலை
தன்னைத் தினமோதி
திடங்கொண்டார் புவிமீது

சில்லாலை யூருக்குச்
சிறுதூதர் வருமுன்னே
நல்மூப்பர் துணையோடு
நலம்யாவும் அவர்பெற்றார்
பல்லாண்டு இருள்நீக்கப்
பகலவன் போலொருநாள்
சில்லாலை மண்ணில்வாஸ்
செறிவோடு கால்பதித்தார்

சில்லாலை ஊர்சிலிர்த்து
சிறுபொழுதில் அடங்கிற்று
எல்லார் உணர்வினிலும்
இனியமணம் வீசிற்று
ஒல்லாந்தர் கண்ணிருந்து
உன்னதரைக் காப்பாற்ற
எல்லாருந் திடம்பூண்டார்
இரவிரவாய் விழித்திருந்தார்

ஊருறங்கிப் போனாலும்
உள்ளங்கள் விழித்திருந்து
வேரறுந்து போகாது
விசுவாச நீரருந்தும்
திருவருட் சாதனமும்
திருப்பலியும் ஒப்புரவும்
இரவோ டிரவாக
இனிதே நடந்தேறும்

அங்கொருநாட் செபத்தில்
ஆழ்ந்திருக் கையிலே
ஆங்கவர் கரத்தில்
ஆண்டவர் குழந்தையாய்க்
கண்டனள் ஒருத்தி
கண்டதை யார்க்கும்
விண்டன னில்லைவாஸ்
விரும்பிய வாறுதான்

இத்தனையும் நடந்தேற
அவருக்குள் ஒருசக்தி
சத்தியமா யிருந்தகதை
சற்குரு வேயறிவார்
பக்தியுடன் அவர்புரிந்த
பணிகட்குப் பதிலுரையும்
இத்தரையிற் கிடைத்தமைக்கு
இதுவும்ஒரு சாட்சியே

ஈராண் டிருந்தங்கு
இணையற்றுச் செய்பணி
ஓராயி ரம்ஆண்டுச்
சேவைக்கு நிகராமோ - பின்னர்
போராட வேண்டிப்
புறப்பட்டார் வடமேற்காய்
நேராக உப்புறையும்
ஊரின் திசைநோக்கி

கண்டி அரசின்கீழ்
கற்பிட்டித் தீபகற்பம்
பண்டைத் துறைமுகமும்
புத்தளமும் அங்குதான்
நீண்டரை நூற்றாண்டு
நெருக்கடிக் குள்ளும்மக்கள்
பூண்ட தவம்மட்டும்
பொட்டளவும் பிசகவில்லை

திங்களோர் ஊரென்ற
திட்டத்தின் வரைபடத்தைப்
பங்கம் உறாதபடி
பார்த்தே நகர்த்திவைத்தார்
தங்கு தடையின்றித்
தரையெல்லாம் நடைநடந்து
எங்கும் அவர்பணியை
எளிதாக விதைத்துவைத்தார்

புத்தளத்தில் புனிதர்பணி
புரிவதற்குத் தடையின்றி
எத்திசையும் சுதந்திரத்தை
எளிதோடு சுவாசித்தார்
சத்திய வேதத்தின்
சாரத்தை வடிகட்டி
நித்தமும் அவரூட்ட
நிமிர்ந்தது நம்வேதம்

புத்தள மிருந்தவர்
புனைந்த கடிதந்தான் - இன்னும்
நித்திய சாட்சியாய்
நிலைக்குது கோவாவில்
அதுவரை நடந்தவை
ஆன்மநற் சேவைகள்
அதனொடு வேதனை
அனைத்தும் அடங்கும்

ஓராண்டு இவ்வாறு
இறைபணி முடிந்ததும்
நேராகக் கீழ்நோக்கி
நகர்வதே அவர்திட்டம்
பாராளும் ஒல்லாந்த
படைகளின் திட்டமோ
வேறாகிப் போராட
வீழ்ந்ததுநீர் கொழும்பு

- வளரும் -

## மலைப்பொழிவின் நினைவாலயம்

இயேசுவின் மலைப்பொழிவு உலகப் புகழ் பெற்றது. பல மதத்தினரையும் கவர்ந்தது. மகாத்மா காந்தி இயேசுவின் மலைப்பொழிவினை மிகவும் பாராட்டியதோடு அதனைத் தமது வாழ்க்கை நெறியாகவும் கொண்டிருந்தார்.

மலைப்பொழிவு நடைபெற்ற இடத்தில் அழகிய ஆலயம் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஆரஞ்சு மரங்களும், வாழைமரங்களும் கலந்து காணப்படும் தோப்பினிடையே அவ்வாலயம் அமைந்துள்ளது. திராட்சைத் தோட்டங்களும், பசும்பயிர்களும் கண்ணுக்கெட்டியமட்டும் தென்படுகின்றன. இத்தகைய பின்னணியில் அமர்ந்துதான் இயேசு தம் மலைப்பொழிவைச் செய்திருக்கவேண்டும். இக்கோவிலின் மேல்கோபுரம் முட்டை வடிவில் அமைந்துள்ளது. எட்டுப்பட்டைக் கட்டிடம் இது. இதன் ஒவ்வொரு பகுதியிலும் மலைப் பொழிவின் ஒவ்வொரு வாக்கியமும் பெரிய எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளது.





## யோர்தான் நதி

உலகிலே புண்ணிய நதிகளாக எண்ணப்படுபவை தாராளம். அவற்றிலே எண்ணற்ற மக்கள் மூழ்கி எழுகின்றனர். எப்படி அல்லது ஏன் ஒரு நதி புனிதமானது என்ற கேள்விக்குச் சரியான பதில் கிடைப்பதில்லை. ஆனால், யோர்தான் நதியின் புனிதத்தன்மைக்குத் தக்க சான்றுகள் உள்ளன. இஸ்ராயேல் இனம் இதைக் கடந்துதான் பாலஸ்தீனாவில் குடியேறினர்; நாமான் என்பவர் இதில் மூழ்கி எழுந்ததால்தான் அவரது தொழுநோய் குணமானது. இந்நதியிலிருந்துதான் எலியாஸ் அனல் பறக்கும் தேரில் அற்புதமாக விண்ணகம் சென்றார். இவற்றிற்கெல்லாம் மேலாக இந்த ஆற்றில்தான் தெய்வத் திருமகன் திருமுழுக்குப் பெற்று, இதன் நீரைத் திருநிலைப்படுத்தியுள்ளார். யோர்தான் நதி வடக்கேயுள்ள பனி சூழ்ந்த ஹேர்மன் மலையில் தொடங்கி இஸ்ராயேல் நாட்டின் எல்லையாக ஓடி இறுதியாக சாக்கடலில் சங்கமமாகிறது. இதன் நீளம் சுமார் 233 மைல் ஆகும். இதன் அகலம் எப்பகுதியிலும் 250 அடிக்கு மேல் இல்லை.

## நாசரேத்

நாசரேத்தூர் இயேசுவைப் பொறுத்தமட்டில் தனிச்சிறப்புடைய நகரமாகும். கி.மு 1000 ஆண்டுகளுக்கு முன்பே அங்கு மக்கள் வாழ்ந்ததாக தொல்பொருள் ஆராய்ச்சி கூறுகிறது. இங்குதான் வார்த்தை மனுவுருவாகியது; இங்குதான் மனுவுருவான வார்த்தை 30 ஆண்டுகள் வாழ்ந்தது. நசரேத் என்றால் அழகிய மலர் என்பது பொருள். புல்வெளிகளும், பூந்தோட்டங்களும், வளமிக்க வயல்களும் வனப்புள்ள சோலைகளும் நிறைந்து காட்சியளிக்கும் இம்மருதநிலப்பகுதியில் மணமிக்க மலர்கள் மலிந்து காணப்படுவதால் அழகிய மலர் என்ற பொருளைத் தரும் நாசரேத் என்ற பெயர் மிகவும் பொருத்தமானதாகும்.






## திருச்சபையின் முக்கிய தந்தையர்கள்

பண்டைக் காலத்தில் கிறிஸ்தவ இயல் நூல்களை எழுதிய எழுத்தாளர்களை "திருச்சபையின் பிதாக்கள்" என அழைக்கிறோம். அக்காலத்தில் 'பிதா' அல்லது 'தந்தை' எனும் சொல் கல்வியூட்டும் ஆசிரியர்களைக் குறித்தது. பண்டைய காலகட்டங்களில் திருச்சபையில் போதிக்கும், மறையறிவு புகட்டும் பணி ஆயர்களுக்கே உரியதாய் இருந்தது. எனவே, முதலில் அவர்களே பிதாக்கள் அல்லது தந்தையர்கள் என அழைக்கப்பட்டனர்.

4ம் நூற்றாண்டில் தோன்றிய போதகவாத எதிர்வாதங்களின் விளைவாக 'பிதா' அல்லது 'தந்தை' எனும் சொற்கருத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. இதன் பயனாய்த் திருச்சபையின் பாரம்பரியம், போதனைகளை, மரபுகளைப் பிரமாணிக்கமாய் எழுதியவர்களாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆயர் இல்லாத திருச்சபையின் எழுத்தாளர்களும் திருச்சபையின், பிதாக்கள், தந்தையர்கள் என அழைக்கப்பட்டனர். இதற்கமைய புனித அகுஸ்தீன், சென்மபாவம் பற்றிய திருச்சபையின் போதனைகளை எழுதிவைத்த ஆயரில்லாத புனித எரோமை திருச்சபையின் தந்தை எனக் குறிப்பிடுகிறார்.

இன்று பண்டைய மரபுகள், கொள்கைகள், கோட்பாடுகள், தூய வாழ்வு, திருச்சபையின் அங்கீகாரம், பழங்காலப் பழக்கவழக்கங்கள் போன்ற பண்புகளையுடைய 4ம், 7ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இறையியல் எழுத்தாளர்களே திருச்சபையின் தந்தையர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களின் போதனைகளும் நூல்களும் திருச்சபையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாய்க் கருதப்படுகின்றன. தவறான போதனைகளும், தப்பறையான கொள்கைகளும் தலை தூக்கிய காலங்களிலே திருச்சபையின் உண்மையான பரம்பரைக் கொள்கைகள், போதனைகளை முன்வைத்த பெருமை இவர்களின் நூல்களையே சாரும். வேதாகமத்திற்கு ஒருமித்த மனதுடன் இவர்கள் அளிக்கும் விளக்கங்கள் வழுவா வரம் உடையனவாய் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இத்தகைய தந்தையர்களை கீழ்நாட்டு, மேல் நாட்டுத் தந்தையர் என இருவகைப்படுத்தினர். கீழ்நாட்டுப் பிதாக்களிலே புனித அத்தனாசியுஸ், புனித கிறிஸ்தோம் அருளப்பர், புனித பசில், புனித கிரகோரி, நாசியென்ஸ், புனித நிஸ்ஸாகிரகோரி போன்றோரும் அடங்குவர். இவற்றில் பின்னைய மூவரும் கப்பதோக்கியாவைப் பிறப்பிடமாகக் கொண்டதால், "கப்பதோக்கியப் பிதாக்கள்" என்றும் அழைக்கப்பட்டனர். மேல்நாட்டுப் பிதாக்களாய் புனித இலாரியார், புனித அம்புரோசியார், புனித எரோம், புனித அகுஸ்தீன், புனித பெரியகிரகோரியார் என்பவர்களும் அடங்குவர். இவர்களிலே குறிப்பிட்டுக்கூறக்கூடியதாய் ஒருசிலர் அதிக நூல்களையும், போதனைகளையும், அரும்பணிகளையும் ஆற்றியுள்ளனர்.

அவர்களுள் புனித அத்தனாசியுஸ் 296ல் பிறந்து, அலெக்சாந்திரியாவிலே ஆயரின் கீழ் பணியாற்றினார். ஆரியப் பேதகத்திற்கு எதிராய் முழு மூச்சாய்ப் போராடினார். 327ல் ஆயராய்த் திருநிலைப் படுத்தப்பட்டு அலெக்சாந்திரியாவில் 50 ஆண்டுகள் பணி புரிந்தார். பல பொய்க்குற்றங்கள் சாட்டப்பட்டு ஆரியரின் தூண்டுதலால் நாடுகடத்தப்பட்டார். பலவகையான இடர்கள் மத்தியிலும் திருச்சபையின் தூணாய் விளங்கி 373ல் மரணமானார்.

புனித அலெக்சாந்திரியா சிறில் 376ல் பிறந்தார். அலெக்சாந்திரிய இறையியல் கல்லூரியில் கல்வி பயின்றார். 412ல் ஆயரானார். அஞ்ஞான முறைகளுக்கும், தப்பறையான போதனைகளுக்கும் எதிராய்க் குரல் கொடுத்தார். "இயேசுக் கிறிஸ்து இறைவனல்ல" எனும் போதகத்திற்கு எதிராய் வாதாடி இயேசுவின் இறைதன்மையை மிகைப்படுத்திப் போதித்தார். மரியாளுக்கு எதிரான போதனைகளையும் வாதாடி மரியாள் இறைவனின் தாய் என்பதையும் நிலைநாட்ட அயராது பாடுபட்டு மரியியலுக்குச் சான்று பகர்ந்தார். இறுதிவரை தன்பணியை மும்முரமாய்ச் செய்து 444ல் மரித்தார்.

புனித எரோம் 331ல் இத்தாலியிலுள்ள ஸ்ரீடொன் என்னுமிடத்தில் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தார். உரோமையில் கல்வி பயின்று இலத்தீன் உரோமைய இலக்கியம், வாக்கலங்காரம் போன்ற பல்கலைகளிலும் திறம்பட விளங்கினார். 374ல் துறவறத்தின்பால் ஈர்க்கப்பட்டு கீழ்நாடுகள் நோக்கிச் சென்றார். அந்தியோக்கியாவில் கிறிஸ்து இவருக்குக் கனவில் தோன்றி "நீ சிசரோவைப் பின்பற்றுகிறவனேயன்றி கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனல்ல" என்று கூறியதற்கிணங்க கிறிஸ்தவ இலக்கியத்தினைவிட உரோமைய இலத்தீன், இலக்கியங்களில் காட்டும் ஆர்வத்தை இயேசு கண்டிப்பதனை உணர்ந்தார். பின் வனாந்தரத்திற்குச் சென்று ஏகாந்திய வாழ்வு வாழ்ந்தார்.

● தொடரும்...




## எதிரி

நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது நம் எதிரிகளிடம்தான். எதிரிகள் வெளியிலும் இருப்பார்கள்; நம்மிலும் இருப்பார்கள். கடவுள் துணையாய் இருப்பதுபோல் சிலவேளைகளில் எதிரியும் நமக்குத் துணையாய் இருப்பார்.

நண்பர்கள் இரண்டுபேர் ஒரு காட்டில் வேட்டைக்குச் சென்றனர். அப்போது சிங்கமொன்று அவர்களைத் துரத்தியது. அதற்குக் கடும்பசி. ஓடிவரும் அதன் வேகமும் அதன் கர்ஜனையும் பசியின் உக்கிரத்தை வெளிப்படுத்தின. அவரவர் இஷ்டதெய்வங்களை வேண்டிக்கொண்டு இருவரும் மின்னல் வேகத்தில் ஓடினர். பின்னால் திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடிக்கொண்டிருந்தவனைப் பார்த்து அவன் நண்பன் கேட்டான் "முட்டாள் ஏன் இவ்வளவு வேகமாய் ஓடுகிறாய்? உன்னால் சிங்கத்தின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியுமா? சிங்கத்தை விட உன்னால் வேகமாக ஓடித் தப்பிக்க முடியுமா என்ன?"

அவன் ஓடிக்கொண்டே சொன்னான் "நம்மைத் துரத்துகின்ற சிங்கத்தின் வேகத்திற்கு என்னால் ஈடுகொடுக்க முடியாதென்பது உண்மைதான். ஆனால், உன்னைவிட வேகமாக ஓடினால் போதும்" - இங்கு எதிரிதான் மற்றவனைக் காப்பாற்றும் துணையாளன்.

ஆபிரிக்கப் பழமொழியொன்று பின்வருமாறு கூறுகின்றது.

**'உனக்குள் எதிரி என்று யாரும் இல்லாவிட்டால் கவலை வேண்டாம். பின்பு வேறு எங்கும் அவன் தென்படமாட்டான்'**

**'உங்களைப் பற்றியும் உங்கள் எதிரியைப் பற்றியும் உங்களுக்கு ஞானம் உண்டென்றால் பிறகு ஒரு கவலையும் கிடையாது. நூறு போர்களில் ஈடுபட்டாலும் நீங்கள்தான் ஜெயிப்பீர்கள்"** - Sun Tzu

வெளியே நமக்காக இன்னுமோர் எதிரி காத்துக் கிடக்கின்றான். அவனைச் சந்திக்கு முன் உள்நாட்டில் கலகம் செய்பவனை ஒருகை பார்த்துவிட வேண்டும். அதுதான் தாமதம்; எந்தவொரு வேலையையும் தள்ளிப்போடுவதால் வெற்றியின் ஒரு நாளைத் தள்ளிப்போடுகின்றோம். இதனால் ஏற்படும் இழப்புகள் நம் கண்முன்னே நடந்துவிடுகின்றன. முடிவு எடுப்பதைத் தள்ளிப்போடுவது முடிவு எடுக்கத் தெரியாது என்பதனால் அல்ல. முடிவெடுக்க வேண்டாம். காலதாமதம் உண்மையை உணர்த்தும்.

வாய்ப்புகள் கிடைக்காமல் போவதற்கு யார் காரணம்? சந்தர்ப்பங்கள் என்பது பழுத்த பழம் அல்ல. தானாகக் கனிந்து



விழுந்துவிடுவதற்கு. **'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்'** இது இயேசுவின் வாக்கு. **'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'** என்று கிருஷ்ணர் சொன்னார். அப்படியானால் இருவரும் முரண்பாடான கருத்தைக் கொண்டவர்களா?

**'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'** என்பது பகவத் கீதையில் உள்ளதுதான். ஆனால், அதன் அடுத்த வரியை நாம் கண்டுகொள்வதில்லை. அவ்வரி **'நீ பற்று வைக்காமல் செய்யும் கடமைக்கு பலன் கட்டாயம் வந்தே தீரும்'** இருவர் சொன்னதும் ஒன்றுதான்; நாம்தான் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும் ஒரு தாயைப்போல.

**'பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து'** என்று பாடினார் மாணிக்கவாசகர். சரியாகப் பத்து மணிக்குக் குழந்தைக்குப் பசிக்கும் என்று தாய் நினைப்பார்.

தோல்வி என்பது இன்னுமோர் எதிரி. தோல்வியை ஏற்றுக்கொள்பவனுக்கு அதுவே வெற்றி. காமராஜர் எப்படிப்பட்ட மனிதர் என்றால், அவருக்குக் கெடுதல் நினைப்பவன் கூட அவருடன் பழகிவிட்டால் இந்த மனிதருக்கா கெடுதல் நினைத்தோம் என வருந்துவான். அப்படிப்பட்ட காமராஜர் கூட 1971ம் ஆண்டு நடந்த தேர்தலில் ஒரு கல்லூரி மாணவனிடம் தோற்றுப்போனார்.

தேர்தலில் முறைகேடு என்றோ, வாக்குச் சீட்டில் மோசடி என்றோ அவர் அறிக்கை விடவில்லை. அவர் என்ன சொன்னார் தெரியுமா?

**"தோத்துட்டோம். நல்லா தோத்துட்டோம். இதுதான் நிஜம். சும்மா ஊழல் என்று சொல்லி நம்ம தோல்வியை மறைக்காதீங்க"**

வின்ஸ்டன் சேர்ச்சில் அவர்கள் ஒருமுறை சொன்னார்கள் **"உமக்கு எதிரிகள் உண்டா? ஹலோ கையைக் கொடுங்கள். நீங்கள் எப்போதோ எதையோ சாதித்துள்ளீர்கள்"**

நாம் சாதிக்க நினைக்கும்போது சந்திப்பது எதிரியையும்கூடத்தான். எதிரியின் அடையாளம் நமக்குத் தெரியாது. அவன் நமது நண்பனாகக்கூட இருக்கலாம்.

**'உன் நண்பன் ஒரு நாளைக்கு எதிரியாக மாறக்கூடும் என்று நினைத்து அவனிடம் பழகு'**
- Publilius Syrus

**'எதிரி தவறு செய்யும்போது அவனைத் தொந்தரவு செய்யாதே. அதேபோல் எதிரிகளுடன் எப்போதும் சண்டை போட்டுக்கொண்டிராதே. பிறகு அவனுக்கு எல்லா உத்திகளையும் கற்பித்தது போலாகிவிடும்'** - நெப்போலியன்

**'ஒருவனுக்கு ஆயிரம் நண்பர்கள். ஒருவரும் கூப்பிடும் நேரத்திற்கு வரமாட்டார்கள். ஆனால் அவனுக்கென்று இருக்கும் ஒரே எதிரி எப்போதும் அவன் பார்வையில் பட்டுக்கொண்டே இருப்பான்'** - Ali ibn - Abi - Talib

என்ன மூச்சுவாங்குகின்றதா...? எதிரியைப் பற்றி இவ்வளவு எச்சரிக்கைகளா? முதலில் நமக்குள் இருக்கும் எதிரியைக் கண்டுபிடித்து நசுக்கிவிட்டு, பின்னர் வெளி எதிரியைத் தேடுவோம்.

நாய் குரைக்கும்போது நாம் ஓட ஆரம்பித்தால் அது எம்மைத் துரத்தும். சட்டென்று திரும்பி நின்றுபாருங்கள் நாய் ஓட ஆரம்பிக்கும். நாயைப் பார்த்து நாம் மட்டும் பயப்படவில்லை. நம்மைப் பார்த்து நாயும் பயப்படுகின்றது. எதிரியால் நமக்கு ஆபத்து என்று நாம் நினைப்பது போல் நம்மால் எதிரிக்கும் ஆபத்து என்று எதிரியும் நினைப்பான் என்பதை மறந்துவிடக்கூடாது, என்றாலும் எச்சரிக்கை தேவைதான்.



"கோழி இறைச்சி சாப்பிட்டா கோழிக்காய்ச்சல் வரும்"

"கோழி இறைச்சி சாப்பிடாமல் சாகிறதைவிட, கோழி இறைச்சியை சாப்பிட்டுட்டே சாகுவம்"

• மணி

# மன்னாரில் தமிழ்நேசன் அடிகளாரின் 'நெருடல்கள்' கவிதைத் தொகுதி நூல் வெளியீடு

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகையான 'மன்னா' பத்திரிகையின் ஆசிரியருமான அருட்பணியாளர் தமிழ்நேசன் அடிகளாரின் 'நெருடல்கள்' என்ற கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா கடந்த 28.11.2009 அன்று மன்னார் நகரசபை மண்ணடபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் ஆயர் மேதகு. இரா.யோசேப்பு ஆண்டகை, மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.எம்.ஏ.ஜே.துரம், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ஏ.ஆபேல் றெவல் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். நூலின் முதல் பிரதியை மன்னார் ஆயர் அவர்கள் கலைஞர் குழந்தை (திரு.செ.செபமாலை) அவர்களுக்கு வழங்கினார். நூல் நயப்புரையை வங்காலை மன்/ஆனாள் மகாவித்தியாலய ஆசிரியர் மொழியும் வள்ளல், கவிஞர் தென் புலோலியூர் பராரதீஸ் அவர்கள் நிகழ்த்தினார். திரு.மக்கள் காதர் அவர்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

படங்களுடன் கூடியதாக வித்தியாசமான வடிவமைப்பில் வெளியிடப்பட்டுள்ள இக்கவிதை நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி துரை மனோகரன் அவர்கள்.

இந்நூலுக்கு நயப்புரை வழங்கியுள்ளார் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் கலாநிதி செ.யோகராசா அவர்கள் இந்நூலுக்கு கருத்துரை வழங்கியுள்ள பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் "தமிழ்நேசன் அடிகளாரின் ஆள்நிலைப் பிரக்ஞைகளின் வெளிப்பாடாகவே இக் கவிதைத் தொகுதி அமைகிறது" எனக் குறிப்பிட் டுள்ளார்.

இந்நூல் தமிழ்நேசன் அடிகளாரின் மூன்றாவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

**– வி.எஸ்.சிவகரன் –**






## குறும்(புப்)பா - 30

மழைவெள்ளம் மண்குடிசை போச்சி
பசிவந்து நாலுநாள் காய்ச்சி
பிழையில்லை நிவாரணப் பொருள்வந்து சேர்ந்ததால்
நிமிர்ந்தாளே மரியம்மா ஆச்சி

~ மலர் ~

# ஆங்கிலிக்கன் சபை கத்தோலிக்கத் திருச்சபையுடன் முழுமையாக இணைவது குறித்து பாரம்பரிய ஆங்கிலிக்க ஒன்றியத்தின் தலைவர் மகிழ்ச்சி

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் முழுமையாக இணையவேண்டும் என்ற ஆங்கிலிக்கக் கிறிஸ்தவ சபையினரின் செபம் மிக அதிகமாகவே கேட்கப்பட்டுள்ளதாக பாரம்பரிய ஆங்கிலிக்க ஒன்றியத்தின் தலைவர் கூறினார்.

ஆங்கிலிக்கன் சபையின் ஆன்மீக மற்றும் திருவழிபாட்டுத் தனித்தன்மைகளுடன் அச்சபையினர் கத்தோலிக்கத் திருச்சபையில் முழுமையாக இணைவதற்குத் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அனுமதியளித்திருப்பது குறித்த வத்திக்கான் அறிவிப்புக்குப் பதிலளித்த ஆங்கிலிக்கன் பேராயர் ஜான் ஹெப்வர்த் இவ்வாறு கூறினார். திருத்தந்தையின் இந்தத் தாராள மனப்பாங்கு, பாரம்பரிய ஆங்கிலிக்கன் சபை ஒன்றிய அமைப்புக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இருபதுமுதல் முப்பது ஆங்கிலிக்கன் கிறிஸ்தவ சபை ஆயர்கள் கத்தோலிக்கத் திருச்சபையில் இணைவது குறித்து விண்ணப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திரு. அருள்பிரகாசம் சொலமன்

இவர் முந்நாள் ரயில்வே பிரதம பாதுகாவலரும்,
ஆயரில்ல பிரதம இலிகிதருமாவார்

மலர்வு
10.07.1930

உதிர்வு
03.01.2006



உள்ளமதில் உறைந்து நின்று
உயிரூட்டி வாழவைக்கும்
உயிரோம் என் இனிய பதியே!
கருணையே கற்பகதருவே!
தினம் தினம் தேடுகின்றோம்
திரவியமாய் வந்துவிடு
எம்மடியில் இனிதாக

மனைவி, மக்கள், மருமகன், பேத்தி மற்றும் உறவுகள்

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி 15- 01 - 2010

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 83

(எண்ணிக்கை 18:17-32)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மாடு, ஆடு, வெள்ளாடு இவற்றின் தலையீற்றை நீ மீட்க வேண்டாம்; அவை புனிதமானவை. அவற்றின் இரத்தத்தை நீ பலிபீடத்தின்மேல் தெளிப்பாய்; அவற்றின் கொழுப்பை நெருப்புப் பலியாக்குவாய்; அது ஆண்டவருக்கு உகந்த ........................................... விளங்கும். ஆரத்திப் படையலாக அளிக்கப்படும் இறைச்சியான அவற்றின் மார்பகமும் முன்னந்தொடையும் உன்னைச் சேரும். இஸ்ரயேல் மக்கள் ஆண்டவருக்கு உயர்த்திப் படைக்கும் புனித ........................................... அனைத்தையும் நான் உனக்கும் உன்னோடிருக்கும் உன் புதல்வர் புதல்வியருக்கும் என்றுமுள நியமமாகத் தருகிறேன்; இது உனக்கும் உன்னோடிருக்கும் உன்வழி மரபுக்கும் ஆண்டவர் திருமுன் என்றுமுள "........................................." ஆகும். மேலும் ஆண்டவர் ஆரோனிடம் கூறியது: "அவர்கள் நாட்டில் உனக்கு உரிமைச் சொத்து ஏதுமில்லை, அவர்களிடையே உனக்குப் பங்கும் இல்லை; இஸ்ரயேல் மக்களிடையே உனக்குப் பங்கும் ........................................... நானே. இஸ்ரயேலின் பத்திலொன்று அனைத்தையும் லேவியருக்கு உரிமைச் சொத்தாகத் தந்திருக்கிறேன்; சந்திப்புக் கூடாரப் பணியில் அவர்கள் ஏற்கும் பங்கிற்கு இதுவே கைம்மாறு, இது முதல் இஸ்ரயேல் மக்கள் ........................................... கூடாரத்தருகில் வர வேண்டாம்; வந்தால் அவர்கள் பாவம் சுமந்து மாழ்வர். ஆனால் லேவியர் சந்திப்புக்கூடாரத்தில் பணி செய்வர்; அவர்கள் குற்றம் அவர்கள் மேலேயே இருக்கும்; உங்கள் தலைமுறைதோறும் இது என்றுமுள நியமமாக விளங்கும்; ........................................... மக்களிடையே அவர்களுக்கு உரிமைச் சொத்தாக ஏதுமில்லை" என்றார். பின்னர், ஆண்டவர் மோசேயிடம்: "நீ லேவியரிடம் 'நான் இஸ்ரயேல் மக்களிடமிருந்து உங்களுக்கு உரிமைச் சொத்தாகத் தந்த பத்திலொன்றை எடுக்கும்போது, நீங்களும் அதிலிருந்து ஒரு படையலை, அதாவது, ........................................... பத்திலொன்றை ஆண்டவருக்கு உயர்த்திப் படைக்க வேண்டும். அவை தானியமாகவும் திராட்சைப் பழ ஆலையின் இரசமாகவும் கருதப்படும். இவ்வாறு வரும் ஆண்டவரின் படையலை குரு ஆரோனுக்குக் கொடுப்பீர்கள். உங்களுக்கு வரும் ........................................... அனைத்திலும் மிகச் சிறந்ததும் தூய்மையானதுமானவற்றை ஆண்டவருக்கு உயர்த்திப் படைக்கும் படையலாக அளிக்க வேண்டும். அதனை நீங்களும் உங்கள் ........................................... உண்ணலாம்; அது சந்திப்புக்கூடாரத்தில் நீங்கள் செய்யும் பணிக்காக வரும் கைம்மாறு ஆகும். நீங்கள் அதில் மிகச் சிறப்பானதைப் படைப்பதால் இந்தக் காரியத்தில் உங்கள்மேல் ............................... இராது; நீங்கள் இஸ்ரயேல் மக்களின் புனிதப் பொருள்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள், இல்லையேல் சாவீர்கள்' என்று சொல்" என்றார்.

**விடைகள் : உரிமைச் சொத்தும், இஸ்ரயேல், வீட்டாரும், பாவம், பத்திலொன்றிலிருந்து, படையல்கள், கொடைகள், சந்திப்பு, உப்பு உடன்படிக்கை, நறுமணமாக**

[வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது]

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 83

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. நான்கு வேதங்களில் மிகவும் பழமையானது
   (இருக்கு, யசுர், அதர்வனம்)

2. உலகில் அதிக டெஸ்ட் சதங்களை அடித்த வீரர்களில் முதலாமவர்
   (பிரைன் லாரா, கவாஸ்கர், சச்சின் டெண்டுல்கர்)

3. உலகின் முதலாவது தமிழ் நூல் என்று சொல்லப்படுவது
   (அகநானூறு, புறநானூறு, தொல்காப்பியம்)

4. யாகாவாராயினும் ..........................................................................
   (மெய்காக்க, நாகாக்க, மண்காக்க)

5. இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட ஆண்டு
   (1987, 1988, 1985)

6. வல்லெழுத்து மிகும் சொல்
   (இரவு பகல், பார்த்த பெண், பார்த்து சிரித்தான்)

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 83
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................................................








## விவிலியம் கற்போம் - 81 விடைகள்

பன்னிரெண்டு, சந்திப்பு, இஸ்ரயேல், கோல்களை, ஆண்டவர், ஆரோனின், தலைவனும், கிளர்ந்தெழுவோர், மோசே, நெருங்கி

## அறிவை வளர்ப்போம் - 81 விடைகள்

1) அமெரிக்கா 2) ஜப்பான் 3) பிரித்தானியா 4) பங்கிரியாஸ்
5) ஆறுகடக்கப் பாயவும்வேணும் 6) படர்க்கை வினைமுற்று

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுபவர்**

- R. விக்ரர்
  1176, பாலையூற்று
  திருகோணமலை

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- சி. நிலுக்ஷிக்கா
  தூய மாட்டின் டீ போரஸ்
  ஆலயம், கித்துள்வெவ
- அருள்கிசாந்தினி -
  -சகாயதாசன்
  83, பிள்ளையாரடி வட்டாரம்
  செங்கலடி

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 33 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  M. சந்தனம் லோரன்ஸ்
  புனித அப்போஸ்தலிக்க
  நிறுவனம்
  தலவாக்கலை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  செல்வி. C. மேரி ஹெலன்
  -பிரீத்திக்கா
  65, திருச்செந்தூர் கோவில்
  வீதி, கல்லடி
  மட்டக்களப்பு
- 3ம் **பரிசு** - 100/=
  கு. யனுசிகா
  22/11, பாரதிலேன்
  கச்சேரி நல்லூர்வீதி
  சுண்டிக்குளி
  யாழ்ப்பாணம்

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**

காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக்
கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள
நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர்ஒளி உதித்துள்ளது.

எசாயா 9:2

விழவொன்று தோன்றும் வெளிச்சம் ஒன்று வீசும்
அழவானம் சிவக்கும் அருள் வந்து நிறைக்கும்
என்னும் நம்பிக்கை நிறைந்த நல்வாழ்த்துகளைத்

## தொண்டன்

வாசகர்கள், எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள்
மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்!




வனசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு